# புதிய அரசியல் திட்டத்தில் 29-வது ஷரத்து சேர்க்கப்படவேண்டும்

Registered as a News Paper in Ceylon விலை சதம் 15 ★ ★

# ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண்: 49
போன் : 389

மலர் 12
இதழ் 165
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் ஆடி 10 ஜமா. அல் 21 ஞாயிற்றுக்கிழமை [26-7-70]

**ஈழநாடு சந்தா**

| | தினப்பதிப்பு | வாரப் பதிப்பு |
|---|---|---|
| 3 மாதம் | ரூ. 18-00 | ரூ. 4-00 |
| 6 மாதம் | ரூ. 34-00 | ரூ. 7-50 |
| வருடம் | ரூ. 66-00 | ரூ. 14-00 |

முற் பணம் கட்டவேண்டும். தபால் அல்லது ஆள்மூலம் அனுப்பப்படும்.

## முஸ்லிம் லீக் வற்புறுத்து

கொழும்பு, ஞாயிறு

இந்நாட்டில் வாழும் முஸ்லிம்களினதும் குறிப்பாகசிறுபான்மை மக்களினதும் நல உரிமைகள் பாதுகாக்கக் கூடியவகையில் புதிய அரசியல் திட்டத்தில் ஷரத்துக்கள் சேர்த்துக்கொள்ளப்படுகின்றனவா என்பதைக் கவனிப்பதற்கு அகில இலங்கை முஸ்லிம் லீக்கின் மத்திய கமிட்டிக்கூட்டத்தில் ஏழு சட்ட வல்லுனர்கள் கொண்ட குழுவொன்று நியமிக்கப்பட்டது.

டாக்டர் எம்.சி. கலீல் தலைமையில் நடந்த இக் கூட்டத்தில், 29-வது ஷரத்து புதிய அரசியல் சட்டத்தில் புகுத்தப்பட வேண்டுமென்றும் வற்புறுத்தப்பட்டது

டாக்டர் கலீல் இக்கூட்டத்தில் பேசுகையில், 29 வது ஷரத்து புதிய அரசியல் திட்டத்தில் சேர்க்கவேண்டிய அவசியம்பற்றி வற்புறுத்திக் கூறினர்.

புதிய வாடகைக்கட்டுப்பாட்டுச்சட்டத்தில் தேவையான திருத்தங்களைச் செய்வதற்கு வீடமைப்பு அமைச்சரினால் நியமிக்கப்பட்ட செல்வி மொறின் செனிவரத்தின தலைமையில் நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கையில் செய்யப்பட்டசிபார்சை முஸ்லிம்லீக் கமிட்டிவன்மையாகக் கண்டித்தது.

குடியிருப்பாளர்களை நியமிக்க சிபார்சுசெய்யுமுரிமை வீட்டுச் சொந்தக்காரருக்கு இருக்கக்கூடாதென்றும், தனிப்பட்டசபைக்கே அந்த உரிமை இருக்கவேண்டுமென்றும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது. ஜனநாயகத்தின் ஆணிவேரை அறுத்தெறிவதாக உள்ளதென்றும் இதனை கவனிக்க செனட்டர் கிச்சிலான் தலைமையில் ஒருகுழு நியமிக்கப்பட்டது.

— —

## உதவி மந்திரி இன்று திரும்புகிறர்

யாழ்ப்பாணம், ஞாயிறு

வடபகுதியில் கடந்த ஒரு வாரத்துக்கு மேலாகத்தங்கியிருந்து பல பகுதிகளிலும் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்துகொண்ட உதவிக் கலாச்சார அமைச்சர் திரு சோமவீரசந்திரஶ்ரீ இன்று காலை பலாலியிலிருந்துவிமானத்தில் கொழும்பு திரும்புகிறர்.

இங்கு தங்கியிருந்த காலத்தில் உதவி அமைச்சர் கலை கலாச்சார நிகழ்ச்சிகளிலும் புதிய சுதந்திரக்கட்சிக் கிளைகள் நிறுவுவதிலும் தனது நேரத்தைச் செலவிட்டார்.

## சாதிவெறி இனப்பூசல் ஜனநாயகத்தை அழிக்கும்

திருவனந்தபுரம் ஜுலை 25

இனப்பூசல் வகுப்புவாதம் சாதிவெறி இவற்றல் எமது ஜனநாயகம் சீரழிவதை நாம் தடுத்தாகவேண்டும். இதனல் எமது நாடு தனது பாரம்பரியத்தை இழந்து வேற்றுமையால் தன்னிலைமையில் தாழ்ந்துவிடும்.

திருவனந்தபுரம் நகர சபையில் அளிக்கப்பட்ட வரவேற்பில் இந்திய ஜனதிபதி திரு வி.வி. கிரி மேற்கண்டவாறு கூறினர்.

அவர் மேலும் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது, குழந்தைகளின் ஒழுக்கத்திற்கும் உயர்வுக்கும் ஆசிரியர்களும் தாய்மார்களும் பாடுபட வேண்டும் அவர்கள் நலம்பேணவேண்டியது அவசியம்.

## அமைதிப் பணிக்கு அணுப்பரிசோதனை பயன்படலாம்

புதுடில்லி. ஜுலை 25

உலக மக்களின் அமைதி வழிக்கும் பொருளாதார வளத்திற்கும் அணுசக்திப் பரிசோதனை நடத்துவது தவருகாது முன்னேறிவரும் மக்கள் பெருக்கத்திற்கு ஏற்ப பொருள் அபிவிருத்தி செய்ய அப் பரிசோதனைகள் பயன்படலாம்'

இவ்வாறு புதுடில்லியில் நடந்த கூட்டமொன்றில் இந்திய அணுசக்தித் தலைவர் டக்டர் எஸ். எம். சாராபாய் இன்று கூறினர்.

பிரதமர் இந்திராகாந்தி தனது தேர்தல் வெற்றிக்காக அணுகுண்டை வெடிக்க இருப்பதாக வந்த செய்தியை திரு சாராபாய்மறுத்தார்.

# வல்லை இராணுவத்தால் இனி எவ்வித இடையூறும் வராது

## முடிக்குரிய காணிகளில் குடியேறினர்களாம்

கோட்டை, சனி

முன்னைய அரசின் மந்திரிகளினதும், சிங்களவர்களல்லாத காரியாதிகாரிகளதும் தோட்டத் தொழிலாளர்களைப் பிரதிநிதித்துவம் வகித்த எம். பிக்களதும் ஆதரவுடன் அரசாங்கத்துக்குச் சொந்தமான காணியில் குடும்பங்களுடன் குடியேறி இலங்கையர் அல்லாதவர்கள் பல காலமாக வசித்து வருவதாக தெரிய வந்துள்ளதாம்.

இது பற்றி ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட ஆட்சி மன்ற உறுப்பினர்களைக் கொண்ட மூவர் கமிட்டிக்கு இந்தத் தகவல்கள் தெரிய வந்துள்ளதாம்.

இவ்வாறு சட்டவிரோதமாக குடியேறிய இலங்கையர் அல்லாதவர்கள் நெடுங்காலம் அந்த இடங்களில் வசிப்பதற்கு முன்னைய அரசின் அமைச்சு ஆதரவு அளித்து வந்திருப்பதும் தெரியவந்துள்ளதாம்.

மன்னர், வவனியா, மட்டக்களப்பு, திருக்கோணமலை, யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளில் வெளிநாட்டவர்கள் 333 பேர் 28900 துண்டு காணிகளில் குடியேறியிருக்கிறர்கள் என்றும் இவர்களில் ஒருவர் மீது தொடரப்பட்ட வழக்கின் மூலம் மாத்திரம் 78 துண்டு நிலம் மீட்கப்பட்டதாகவும் தெரியவருகின்றதாம்.

மகாநுவரப் பகுதியில் 3730 துண்டு காணிகளைப் படித்துள்ளவர்களில் 1072 பேர் மீது வழக்குத்

## பொதுமக்களுக்கு இராணுவ அதிகாரி வாக்குறுதி

யாழ்ப்பாணம், ஞாயிறு

'நாங்கள் கள்ளக்கடத்தலைத் தடை செய்வதற்கு வந்துள்ளோம். பொதுமக்கள் இராணுவ வீரருக்கு எந்தவித இடையூறும் செய்யவேண்டாம். இனிமேல் இராணுவத்தினரால் எந்தவித இடையூறுகளும் பொதுமக்களாகிய உங்களுக்கு நிகழமாட்டாது. அதே போல நீங்களும் எமக்கு ஒத்துழைப்புத்தர வேண்டும்.' இவ்வாறு பலாலி இராணுவ முகாமின் கமாண்டரான மேஜர் என் ஈ. ஆர். மார்ட்டின் வல்வெட்டித்துறை உதயசூரியன் கழகத்தின் எட்டாவது ஆண்டு விளையாட்டுப்போட்டியின் போது கூறினர்.

உதயசூரியன் கழகத்தின் எட்டாது ஆண்டு விழாவையொட்டி முதலாம் நிகழ்ச்சியாக சைக்கிள் ஓட்டப் போட்டிகளும் பிற்பகலில் மற்றும் விளையாட்டுப் போட்டிகளும் ந[illegible]பெற்றன.

(இமை. நி.)

— —

## கலவரத்தில்

## 'தீவுப்பகுதி படகு சேவையை தேசியமயமாக்குக'

யாழ்ப்பாணம், ஞாயிறு

தீவுப்பகுதி படகுச்சேவையைத் தேசியமயமாக்கப்படவேண்டும் என்று அரசாங்கத்தைக் கோரும் தீர்மானம் கடல்கடக்கும் தீவுப்பகுதி பிரயாணிகள் சபைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

[illegible]மேற்கொண்டிருந்தது. கடந்த பல வருடங்களாக [illegible]ற்சேவையையும் இச் [illegible]கமே நடத்திவந்தது, இப்போதைய அரசாங்கம் தபால்விநி[illegible] [illegible]லப்பத் தனி[illegible] டம் கையளித்துள்ளதைத் தொடர்ந்து, குறிப்பிட்ட

# இளைஞர்கள் தொழில் பயிற்சி பெற புதியதிட்டம்

கோட்டை, சனி

எதிர்கால இளம் சந்ததியினர் தொழில் வாய்ப்புகள் இன்றி கஷ்டப்படாமலிருக்கும் வகையில் தொழில் பயிற்சி கல்வி வழங்குவதற்கான புதிய சட்ட நகல் ஒன்றை கல்வி அமைச்சர் அல்ஹாஜ் பதியுதீன் முகம்

தொழில் பயிற்சிக் கல்விக்கான மசோதாவும் தயாராகிவிடும் என்று கருதப்படுகின்றது. உதவி மந்திரி திரு பீ. வை. துடாவையின் அனுசரணையுடன் தயாரிக்கப்பட்டு வரும் இப்புதிய தொழில் பயிற்சிக்கல்வி சம்

பற்றி சரியாக அறிந்த அந்த வழியில் அவர்களை முறையாக முன்னேற்றுவதற்கு வசதி செய்வதாக இந்த புதிய திட்டம் அமையுமாம். இம்மாதிரி உயர் தொழில் கல்வி பெறும் இளைஞர்களுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காக நியமிக்கப்பட்ட ஆட்சி மன்ற உறுப்பினர்களைக் கொண்ட மூவர் கமிட்டிக்கு இந்தத் தகவல்கள் தெரிய வந்துள்ளதாம்.

இவ்வாறு சட்டவிரோதமாக குடியேறிய இலங்கையர் அல்லாதவர்கள் வசதி நிலம் மீட்கப்பட்டதாகவும் தெரியவருகின்றதாம்.

மகாநுவரப் பகுதியில் 3730 துண்டு காணிகளைப் படித்துள்ளவர்களில் 1072 பேர் மீது வழக்குத் தொடரப்பட்டிருக்கிறதாம்.

# கிராமச்சபை உறுப்பினர் சுட்டுக்கொலை

மட்டுவில், சனி

கிராம சபை உறுப்பினர் ஒருவர் சுட்டுக் கொலைசெய்யப்பட்டார். புலோப்பளை கிராம சபை வட்டாரத்தில் இச்சம்பவம் நடைபெற்றுள்ளது.

சேனாதிராசா செல்வராசா என்ற 35 வயதுடைய புலோப்பளை கிராம சபை உறுப்பினரே துப்பாக்கியால் சுடப்பட்டு மரணமானவர். கடந்த இரவு 8 மணியளவில் இச்சம்பவம் நிகழ்ந்தது.

இப்பகுதியில் உள்ள ஆலயம் ஒன்றுக்குச் சென்றுவிட்டு திரும்பிவருகையில் செல்வராசா சுட்டுக் கொல்லப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். பளையில் உள்ள சாராயத்தவறணைக்கு அண்மையில் இறந்தவர் சைக்கிளில் வந்துகொண்டிருந்தபோது இரு துப்பாக்கிச்சூட்டுச் சத்தம் கேட்டதாகவும், இதைத்தொடர்ந்து ஒருவர் இறந்துகிடந்ததாகவும் ஆறுமுகம் என்பவர் பொலிஸாருக்கு முதன் முதலாக தகவல்கொடுத்தார் பளைப் பொலிஸார் ஸ்தலத்துக்குச்சென்று விசாரணை நடத்தினர் இறந்தவரின் மனைவியும் சாட்சியமளித்தார்.

சாவகச்சேரி மாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராசா ஸ்தலவிசாரணையில் ஈடுபட்டுள்ளார். கொலைசெய்யப்பட்டதற்குரிய காரணம் எதுவும் இதுவரை தெரியவில்லை. விசாரணை தொடர்கிறது.

# தேயிலைச் சாற்றில் குளிர் பானம்

கோட்டை, சனி

நம் நாட்டில் விளையும் தேயிலைச் சாற்றைக் கொண்டு சுவையுள்ள குளிர் பானம் தயாரிக்க முடியும் என்பது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இதுபற்றி பல காலமாகவே பரிசோதனைகளை நடத்தி வந்த ஆராய்ச்சியாளர்கள், இந்தக் குளிர் பானத்தை சந்தைப்படுத்துவது பற்றியும் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வது பற்றியும் ஆலோசனைகள் நடத்தி வருகின்றனர்.

நாட்டில் விளையும் மிகச் சிறந்த ரக தேயிலையிலிருந்து தயாரிக்கப்படவிருக்கும் இந்த குளிர்பானத்துக்கு வெளிநாடுகளிலும் நல்ல கிராக்கி ஏற்படுமானால் வெளிநாட்டு செலாவணியை அதிகப்படியாகத் தேடிக்கொடுக்கும் ஒரு விற்பனைப் பொருளாக மாறக் கூடும்.

சிறந்த அலுமினியப் பாத்திரங்களுக்கு

டொலர் அலுமினியம்

ONE-DOLLAR

யைத் தேசியமயமாக்கப்படவேண்டும் என்று அரசாங்கத்தைக் கோரும் தீர்மானம் கடல்கடக்கும் தீவுப்பகுதி பிரயாணிகள் சபைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

கடந்த 45 வருடங்களாக ஊர்காவற்றுறை, நயினாதீவு, அனலைதீவு, எழுவைதீவு, குறிகட்டுவான் படகு சேவையை நடாத்திவந்த மோட்டார் வள்ள ஐக்கிய சங்கத்தின் சேவை திருப்திகரமாக இல்லாததால், முன்னைய அரசாங்கம் இச்சங்கத்தைக் குலைத்து, திருப்தியான சேவையை நடாத்துவதற்கான நடவடிக்கைகளை ...ற்சேவையையும் இச் ...கமே நடத்திவந்தது, இப்போதைய அரசாங்கம் தபால்விநியோகப் பொறுப்பைத் தனிப்பட்டவர்களிடம் கையளித்துள்ளதைத் தொடர்ந்து, குறிப்பிட்ட ...கத்தை மூடிவிட சங்க நிர்வாகிகள ஆலோசித்து வருவதாக அறிகிறோம். இச்சங்கத்தை மூடிவிடுவதனால் இதில் கடமை புரிந்துவந்த சுமார் 50 பேர் வேலையிழக்கவேண்டி ஏற்பட்டுவிடும். இதனால் 50 குடும்பங்களின் நிலை அவலநிலைக்குளளாகி கஷ்டமுறவேண்டி ஏற்படும், தீவுப்பகுதி மோட்டார் வளளச் சேவையை தேசியமயமாக்கி, இப்பகுதி மக்களின் கஷ்டத்தை நிவர்த்திசெய்ய வேண்டும் என்று கடல்கடக்கும் பிரயாணிகள சங்கள தேசியமயசேவை அமைச்சருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவித்துளளது

சங்கத் தலைவர் திரு ஆர் ஆர் பூபாலசிங்கம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் தீவுப்பகுதியைச் சேர்ந்த பலர்கலந்துகொண்டனர்,

— —

## "இப்படித்தான் எழுதினேன்"

யாழ்ப்பாணம், ஞாயிறு

'19ம் திகதிய ஈழநாட்டில் வெளியாயிருந்த செய்தி ஒன்றில் தீவுப்பகுதியிலுள்ள பாடசாலைகளில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்கள் கூடுதலான கவனமெடுத்துக்கல்வி கற்பிக்காததினால் இப்பகுதி மாணவர்கள் கல்வித்துறையில் முன்னேற்றமில்லாதவர்களாக இருக்கிறார்கள் என்று நான் கல்வியமைச்சருக்குப் புகார் செய்ததாகக் குறிப்பிடப்பட்டிருந்தது.

தீவுப்பகுதிக்கு இடமாற்றம் செய்யப்படும் பிறவூர் ஆசிரியர்கள் இங்குவரமறுக்கின்றனர். அப்படி வந்தாலும் திரும்பிப் போய்விடுகின்றனர். இதனால் மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். எனவேவெளி மாகாணங்களில் கடமை புரியும் தீவுப்பகுதியைச் சேர்ந்த ஆசிரியர்களை இங்குள்ள காலி இடங்களில் நியமிக்கவும் என்றுதான் நான் கல்விஅமைச்சருக்கு அண்மையில் எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளேன்'' என்று ஊர்காவற்றுறை எம். பி பண்டிதர் கா பொ இரத்தினம் எழுதுகிறார்.

போட்டிகளும் ந...பெற்றன.

(இமை. நி.)

— —

## கலவரத்தில் மூவருக்கும் படுகாயம்

இமையாணன், சனி

உடுப்பிட்டி சந்திக்கருகாமையில் கடந்த புதனின்று நடைபெற்ற ஒரு கலவரத்தில் பங்கு கொண்ட மூவரும் பலத்த காயங்களுக்குள்ளாகி மந்திகை அரசினர் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டனர். காயமுற்றவர்கள் உடுப்பிட்டியைச் சேர்ந்தவர்கள் எனவும் அவர்கள் மிகவும் நெருங்கிய உறவினர்கள் எனவும் தெரியவருகிறது.

இச்சம்பவத்தைத் தொடர்ந்து சுமார் 75 யார் தூரத்திற்கு ரோட்டில் இரத்தத் துளிகள் சிந்தப்பட்டிருந்தன. இரத்தம் தோய்ந்த கால் பாதங்களின் சுவடுகளும் காணக்கூடியதாக இருந்தது,

இன்றி கஷ்டப்படாமலிருக்கும் வகையில் தொழில் பயிற்சி கல்வி வழங்குவதற்கான புதிய சட்ட நகல் ஒன்றை கல்வி அமைச்சர் அல்ஹாஜ் பதியுதீன் முகம்மது தயாரித்து வருகின்றார்.

தற்பொழுது தயாரித்து முடிக்கப்பட்டிருக்கும் புதிய உயர் கல்வி நகல் மசோதா ஆட்சிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டதும் இந்த படுகின்றது. உதவி மந்திரி திரு. பீ. வை. நுடாவையின் அனுசரணையுடன் தயாரிக்கப்பட்டு வரும் இப்புதிய தொழில் பயிற்சிக்கல்வி சம்பந்தமான மசோதா சோஷலிச நாடுகளில் இருந்து வரும் தொழிற் கல்வி முறைகளை தழுவியதாக இருக்கக் கூடும் என்று கூறப்படுகின்றது.

மாணவர்களின் தொழில் நோக்கங்கள் திறமைகள் வதற்கு வசதி செய்வதாக இந்த புதிய திட்டம் அமையுமாம். இம்மாதிரி உயர் தொழில் கல்வி பெறும் இளைஞர்களுக்கு தொழில் வாய்ப்புகள் ஏற்படுத்துவதற்கான இன்னொரு திட்டமும் ஆராயப்பட்டு வருவதாகவும தெரிகின்றது.

## 'குண்டுகளைப்பார்த்து பழகிப்போனவன் நான்!'

### பருத்தித்துறையில் உதவி அமைச்சர்

வல்வெட்டித்துறை, சனி

'குண்டுவீச்சுக்குப் புதியவனல்ல நான்; எத்தனையோ குண்டுகளைப் பார்த்துப் பழகிப்போனவன். ஏகாதிபத்தியத்துக்கு எதிராக போராடி குண்டுகளைப் பார்த்து, ஐந்து தடவைக்குமேல் சிறைக்குள் தள்ளப்பட்டிருக்கிறேன்' என்றுநேற்றுபருத்தித்துறையில் உணர்ச்சி வசப்பட்டுப் பேசினார் உதவி மந்திரி திரு. சோமவீர சந்திரசிறி

பருத்தித்துறை ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்கிளை காரியாலயத்தில்நடந்தவரவேற்புக்கூட்டத்தில் உதவி அமைச்சர் பேசினார். சுதந்திரக்கட்சிக்கிளைத் தலைவர் திரு நாகநாதன் தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் திரு. சோமவீரசந்திரசிறி பேசுகையில், கலாச்சாரத்தால் தமிழ்-சிங் மக்கள் இணையப்பெற்றவர்கள், அவர்களிடையே இப்போது ஒற்றுமை ஏற்பட்டுவிட்டது. சில முதலாளித்துவக் கும்பல்களே கைக்குண்டு கைங்கரியங்களையும் தார்பூச்சு வேலைகளையும் இங்கு செய்கிறார்கள், இது நாளடைவில் ஒழிக்கப்பட்டுவிடும' என்றார்.

அடிக்கடி யாழ்ப்பாணத்துக்கு நானும் மற்றைய அமைச்சர்களும் தென்னிலங்கையிலுள்ள எமது தோழர்களும் வந்து போவதை நிறுத்திக் கொள்ள மாட்டோமென்றும் இரு இன மக்களிடையே நட்புறவு ஏற்பட எம்மாலான உதவிகளை செய்துகொண்டேயிருப்போமென்றும் உதவி அமைச்சர் சொன்னார்.

யாழ்ப்பாணம், ஞாயிறு

இன்று குமுழமுனை கிராம முன்னேற்றச் சங்கத்தாரால் திருநொச்சி எம் பி திரு. வி. ஆனந்தசங்கரிக்கு அளிரனிஸ் சனசமூகநிலைய மைதானத்தில், வண. தேவராசா சுவாமிகள் தலைமையில் பி ப. 6 மணிக்கு பகிரங்க வரவேற்பு ஒன்றுநடைபெறவிருக்கிறது

# தமிழ் மக்களை முன்னைய அரசு ஏமாற்றிவிட்டது

## சு. சே. தொழிலாளர் கூட்டத்தில் வட்டு. எம்.பி.

யாழ்ப்பாணம், ஞாயிறு

''முன்னைய அரசாங்கம் தமிழ் மக்களை ஏமாற்றிவிட்டது. எமது கட்சித்தலைவர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் கூட யு. என். பி. யினால் ஏமாற்றப்பட்டுவிட்டார். இன்றைய அரசாங்கம் மக்கள் அரசாங்கம்; குறிப்பாக உங்கள் அரசாங்கம். அதை நீங்கள் நன்கு ஆதரித்து நடக்கவேண்டியது உங்கள் கடமை''

தேசிய அரசாங்க சுகாதார சேவைத் தொழிலாளர்சங்க 5-வது வருடாந்தக் கூட்டம் யாழ். மாநகரசபை மண்டபத்தில் நடைபெற்றபொழுது வட்டுக்கோட்டை எம் பி. திரு. ஆ. தியாகராசா பேசுகையில் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

வேலைநிறுத்த மூலமோ, சத்தியாக்கிரகம் மூலமோ உங்கள் பிரச்னைகளைத் தீர்த்துக்கொள்ளக் கூடாது. தொழிற்சங்க வாதிகளாகிய நீங்கள் பிளவுபடாமல் ஒற்றுமையாக நின்று சுமுகமானமுறையில் ஒரேநோக்கில் பிரச்னைகளைத் தீர்த்துக்கொள்ள முயலவேண்டும். உங்கள் நன்மையே சமூக நன்மையெனக் கொண்டு செயலாற்ற வேண்டும்.

இன்றைய அரசாங்கத்தில் இருக்கும் சுகாதாரமந்திரி, நிதிமந்திரி ஆகியோரை உங்கள் சங்கத்தின் மூலம்

(4-ம் பக்கம் பார்க்க)

## பெற்றோலியம் கூட்டுதாபனம் அபிவிருத்தித் திட்டங்கள்

கோட்டை. ஞாயிறு

இலங்கைப் பெற்றோலியம் கூட்டுஸ்தாபனம் பல அபிவிருத்தி வேலைகள் செய்யவிருக்கிறது. இவ்வாண்டு 44 கோடி ரூபா பெறுமதியான பொருட்களை உற்பத்தி செய்யுமென நம்பப்படுகிறது. இக் கூட்டுஸ்தாபனம் எடுத்த பூர்வாங்க மதிப்பீட்டின்படி வர்த்தக உற்பத்தி மிக அதிகமாகுமெனவும் கூட்டுஸ்தாபனம் கப்பல்களுக்கு எண்ணெய் விநியோகிக்குமெனவும் தெரிகிறது.

நாட்டிலுள்ள எண்ணெய் வளங்கள் உள்ள இடங்களில் ஆராய்ச்சிகள் நடத்தப்படும். இவ்வாராய்ச்சிகள் இந்த ஆண்டு ஆகஸ்டு மாதம் நடைபெறுமாம்.

அத்தோடு பெற்றோலிய வாயுக்களும் உற்பத்தி செய்யப்படும். இதனால்பல லட்ச ரூபாய்கள் கூட்டுத்தாபனத்திற்கு கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை ஒன்றும் மிகவிரைவில் நிறுவப்படும் 3 ஆயிரம் தொன் கழிவு எண்ணெய் இங்கு சுத்திகரிக்கப்படும். இதற்கான திட்ட அமைப்பு வேலையைநிபுணர்கள் ஆராய்ந்து வருகின்றனர்.

நெற்காணிச்சட்டம்

# "தீவுப்பகுதிக்கு விலக்கு அளிக்கும்"

### — வேலணை கி. ச. தலைவர்

வேலணை, சனி

வேலணைக்கிராமத்தில் நீர்ப்பாசன வசதி இல்லாத காரணத்தாலும். பருவமழை இல்லாமையாலும் இக்கிராமத்திலுள்ள கமக்காரர் நெற்பயிர் செய்து பலனடையாமல் ஏமாற்றமடைகிறார்கள் நெற்காணிச் சட்டம் உருவாக முன்பே இங்குள்ள கமக்காரர்கள் தங்கள் சீவியத்திற்காக உப உணவு உற்பத்தியையும் புகையிலைச் செய்கையையும் முக்கியமாகச் செய்துவருகிறார்கள் இதற்காக பள்ளக்காணிகள உயர்த்தப்பட்டு தோட்டக்காணியாக்கப்படுகின்றது இவ்வாறு நெற்காணிகள உயர்த்தப்பட்டு ஆவன செய்வதற்கு நெற்காணிச்சட்ட மசோதா இடைஞ்சலாக இருக்கிறது. பிரதானமாக தீவுத்தொகுதியில் பெருந்தொகையான நெற்காணியை உரிமையாக வுளளவர்கள இல்லை. அத்துடன் நெற்காணி குத்தகைக்குச் செய்பவர்களும் தீவுப்பகுதியில் இல்லை, ஆதலால் நெற்காணிச் சட்ட

(4-ம்பக்கம்பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

யாழ்ப்பாண புகையிரத ஸ்தானத்திற்கு எதிரில் இரண்டுபரப்பு வெற்று நிலம், லான்ட் இன்வெஸ்ற்மென்ட், 6, பிரதான வீதி. யாழ்ப்பாணம். 3004

வீணை:

புத்தம்புதிய தஞ்சாவூர் ருத்திர வீணை விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: இல. 24, 2-ம் கட்டை குறுக்குத் தெரு, நல்லூர். 2173

யாழ்ப்பாணம் கச்சேரி - நல்லூர் வீதியில் நான்கு பரப்பு வெற்றுக்காணி விற்பனைக்குண்டு. லான்ட் இன்வெஸ்ட் மென்ஸ், 6, பிரதானவீதி, யாழ்ப்பாணம். 3014


## "உயிரை அழிப்பது சுலபம் ஆக்குவது..."

மட்டுவில், சனி

''வாகனங்களைச்செலுத்துவதோ, சாகசங்கள் செய்வதோ சாதாரண விஷயம் ஆனால் வீதியில் நடமாடும் உயிரினங்களையும், அடுத்தவருடை உடைமைகளையும் பொறுப்புடன் கவனித்தே கடமை புரியவேண்டும் என்ற உயர்ந்த நோக்கை சாரதிகள் கடைப்பிடிக்க வேண்டியது மிக மிக அவசியம். ஓர் உயிரை அழித்து விடுவது மிக இலகுவான விஷயம். ஆனால் ஆக்குவதுதான் நம் சக்திக்கு அப்பாற்பட்ட செயல் என்பதை பூரணமாக எண்ணிக் கொண்டால் இதுபோன்ற தவறுகள் ஏற்பட இடமே கிடைக்க முடியாது!''

இவ்வாறு மாங்குளம் முல்லைத்தீவு வீதியிலுள்ள மணவாளன் பட்டை முறிப்பில் நடைபெற்ற லொறிக் கிளீனர் தம்பையா செல்லத்துரையின் விபத்து மரணம் பற்றிய திடீர் மரணவிசாரணையின்போது சாவகச்சேரி பதில் மாஜிஸ்டிரேட் திரு. கனகசபை ஞானச்சந்திரன் சாரதியைப் பார்த்துக் கூறினர்.

மாங்குளத்திலிருந்து முல்லைத்தீவு சென்றுகொண்டிருந்த லொறி விபத்தில் மரணமான கிளீனர் சென்றுகொண்டிருந்தார்.

விபத்தினுல் மரணம் சம்பவித்ததாகத் தீர்ப்பளிக்கப்பட்டது.


## அடைவு நகைகள் ஏல விற்பனவு விளம்பரம்

தொல்புரம் இ. துரையப்பா & சன்ஸ் அடைவு கடையில் 3-11-1968 தொடக்கம் 26-6-69 வரை அடைவு வைத்து மீட்கப்படாத நகைகளை 26-8-70 புதன்கிழமை மு. ப. 8 மணி முதல் மேற்படி கடையில் வைத்து பகிரங்க ஏலத்தில் என்னுல் விற்கப்படும்.

சி. செ. மாரிமுத்து
Commissioner, Auctioneer & Valuer.

விதானை வளவு,
சித்தன்கேணி,
24 7-70. 2378


## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

(காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00.

344 மீ. அன்ட் 61 மீ.

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவநற்சிந்தனை, 6-30 கத்தோலிக்கநற்சிந்தனை, 6-35 மெல்லிசை, 7-30 திரைகானம், 8-00 நிலையஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமியகீதங்கள்.

344 மீ. அன்ட் 49 மீ

பகல் 12-00 தொழிலாளர்கேட்டவை, 1-00கதம்ப இசை.

344 மீ. அன்ட் 61 மீ.

மாலை 4-25 கல்வி ஒலிபரப்பு, 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள். 5-30 வளரும்பயிர்.

இரவு6-00இசைப்பயிற்சி, 7-00 வாத்தியஇசை, 7-15 பாட்டு, 7-45செய்திச்சுருள், 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-30 பேச்சு '9-40 நாதஸ்வரம், 10-30 செய்தித் தொகுப்பு.


ராஜா (யாழ்ப்பாணம்)

தினசரி 6-30, 10-00 மணி
ஜெமினி-சரோஜாதேவி
நடித்த

ஆடிப்பெருக்கு

வெஸ்லிசினிமா
மானிப்பாய்
தினசரி: 6-30,10-00
பிரபோயா,போயா 2-30மணி
சிவாஜி-சாவித்திரி
நடித்த

கர்ணன்
(புதிய கொப்பி)


## வாகனப் போக்கு வரத்து அறிவித்தல்

### 1970-ல் நடைபெறும் நல்லூர் கந்தசுவாமி கோவிலின் வருடாந்த உற்சவ விழா

மேற்படி விழாவின் பொருட்டாக 7-8-70 தொடக்கம் 3-9-70 வரை உட்பட்ட நாட்களிலும் கீழ்க்கண்ட வீதிகள் சகலவித வாகனப் போக்குவரத்துக்களுக்கும் மூடப்பட்டிருக்கும்.

1. பருத்தித்துறை வீதியில் அரசடிச் சந்திக்கும் இரண்டாவது மைல் கல்லுக்கும் இடையிலுள்ள பகுதி.
2. கோவில் வீதியில் பண்டாரக்குளம் ஒழுங்கைக்கும் சோமசுந்தரம் ஒழுங்கைக்கும் இடையில் உள்ளபகுதி
3. செட்டித்தெருவில் பருத்தித்துறை வீதிக்கும் செட்டி ஒழுங்கைக்கும்இடையில் உள்ள பகுதி,

குறிப்பு; வாகனப் போக்குவரத்திற்கு மூடப்பட்டிருக்கும் எல்லைக்குள் வசிப்பவர்களுள், சொந்த வாகனங்களை உபயோகிப்பவர்களுக்கும், அரசாங்கக் கடமையின் நிமித்தம் வாகனங்களில் செல்லவேண்டிய உத்தியோகத்தர்களுக்கும் நல்லூர் கந்தசுவாமி கோவிலுக்கு அண்மையில் நிறுவப்பட்டிருக்கும் தற்காலிகப் பொலிஸ்நிலையத்தில் 6-8-70 பிற்பகல்தொடக்கம் விசேஷ போக்குவரத்து அனுமதிச் சீட்டுகள் வழங்கப்படும்.

### வாகனங்கள் பிரிந்து செல்லல்

வாகனப் போக்குவரத்துக்களில் சாரதிகள் கீழ்க்காணும் பாதைகளில் செல்லுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றுர்கள்.

1. யாழ்ப்பாணத்திலிருந்து கோப்பாய் நோக்கிப் போகும்போது (அல்லது எதிர்த்திசையில்) நாவலர் வீதி, நல்லூர் குறுக்கு வீதி முதலியவற்றுல் செல்லுதல்வேண்டும்,
2. அரசடி வீதி வழியாக கோப்பாய் நோக்கிப் போகும்போது (அல்லது எதிர்த்திசையில்) வைமன்வீதி, நாவலர் வீதி, நல்லூர் குறுக்குத்தெரு முதலியவற்றுல் செல்லுதல்வேண்டும். ...

## 11-வது தடவையும் சாம்பியன்

# வேம்படி மகளிர் கல்லூரியின் சாதனை

யாழ்ப்பாணம்,ஞாயிறு

யாழ் மாவட்டப் பெண்கள் விளையாட்டுச் சங்கத்தினுல் நடாத்தப்பட்ட 'மெய்வல்லுனர்' போட்டியில் வேம்படி மகளிர் கல்லூரி மீண்டும் சாம்பியனுக தெரிவுசெய்யப்பட்டுள்ளது

இப்போட்டியில் வெற்றி பொறும் வீராங்கனைகளுக்கென வழங்கப்பட்ட 14 வெள்ளிக்கிண்ணங்களில், வேம்படி மகளிர் கல்லூரி 10 வெள்ளிக் கிண்ணங்களை தம்வசமாக்கிக் கொண்டதுடன், 11 வருடங்களாக தமதாக்கிக் கொண்டுவந்த சாம்பியன் பட்டத்தையும், இம்முறையும் பறிகொடுக்காது காப்பாற்றிக் கொண்டது.

யாழ் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டியில், யாழ் மாவட்டத்திலிருந்து மொத்தம் 13 பாடசாலைகள் பங்குபற்றின.

வேம்படி மகளிர் கல்லூரியின் வீராங்கனை செல்வி மலைமகள். பங்குபற்றிய மூன்று போட்டிகளிலும், புதிய சாதனையை ஏற்படுத்தி மொத்தம் ஐந்து வெற்றிக் கிண்ணங்களைக் கைப்பற்றி பார்வையாளர்களின் பலத்த கரகோசத்தைப் பெற்றுர்.

சுண்டிக்குளி மகளிர் கல்லூரியின் வீராங்கனை செல்வி சரோஜினி நடராசா (16 வயது) 100 மீற்றர் ஓட்டப் போட்டியில் வெற்றி பெற்று ஒரு புதிய சாதனையையேற்படுத்தினுர்.

இந்தப் போட்டியில் வேம்படி மகளிர் கல்லூரி முதலாவது இடத்தையும், சுண்டிக்குளி மகளிர் கல்லூரி இரண்டாவது இடத்தையும் கனகரத்தினம் மத்திய வித்தியாலயமும், உடுவில் மகளிர் கல்லூரியும் தலா 66 புள்ளிகளைப்பெற்று மூன்ருவது இடத்தையும் பெற்றன.

19 வயது: மலைமகள் (வேம்படி), 16 வயது சரோஜினி நடராசா சுண்டுக்குளி) 13வயது: வி. ஜெயசிங்கம் (சுண்டிக்குளி) ஆகியோரும் சாம்பியன்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

(தே. நி.)

# கிழக்கு பாகிஸ்தான்-யாழ். கோஷ்டியுடன் மோதுகிறது

யாழ்ப்பாணம், ஞாயிறு

கிழக்குப் பாகிஸ்தாதான் பாடசாலை தெரிவுக்ஹொக்கிக் கோஷ்டியும் யாழ்ப்பாண பாடசாலை தெரிவுக் கோஷ்டியும் இன்று (26-ம் திகதி) கொழும்பில் மோதுகின்றன.

கிழக்குப் பாகிஸ்தான் ஹொக்கிக் கோஷ்டி நேற்று முன்தினம் கொழும்பு வந்தடைந்தது. இக்கோஷ்டி இங்கு மொத்தம் 7 போட்டிகளில் கலந்து கொள்வதுடன் இலங்கைப் பாடசாலை ஹொக்கி தெரிவுக் கோஷ்டியுடனும், இரண்டு ''டெஸ்ட்'போட்டிகளில் கலந்துகொள்கின்றது,

இப்போட்டி கொழும்பு ராணுவ மைதானத்தில் நடைபெறுகின்றது.

(தே. நி)

# அச்சுவேலி தொழிற்பேட்டை மூலம் விரைவில் வேலை வாய்ப்பு

## உதவி கலாச்சார அமைச்சர் உறுதி

அச்சுவேலி, சனி

'இன்றைய அரசியல் சூழ்நிலையில் இலங்கைவாழ் மக்களின் நல்லபிப்பிராயங்களையும் ஏற்று அதன் வழி நின்றெழுகி செயலாற்ற வேண்டுமென்பதே எமது கட்சியின் முக்கிய நோக்கமாகும் தமிழ் மக்களின் உரிமைகளைக் கொடுத்து நாட்டிலே சமா[illegible]ம் நிலவ முயற்சிகள் பல எடுத்துவருகின்ருேம். ஒவ்வொரு மத இன மக்களின் கலாசாரங்களைப் பேணிக்காக்க முன்வந்துள்ளோம்-

... ச்சர் திரு. சோமவீரசந்திர சிறி குறிப்பிட்டார்.

இன்று வேலையில்லா பிரச்னை இலங்கை வாழ்மக்களை வாட்டிய வண்ணம் இருக்கின்றது, இதைப் போக்கடிக்க முயற்ச்சிகள் செய்து வருகின்ருேம். இதன் காரணத்தினுலேயே தற்போது நிதி சேகரித்து வருகின்ருேம். இதற்குப் [illegible]து மக்களினது ஆதரவு [illegible]ளைடைவில் கூடிக்கொண்டே வருகின்றது

வேலையற்ற பட்டதாரிகள் அனைவருக்கும் வருகிற ஆண்டு ஆரம்பத்தில் நம் ... மூலமாக வேலையில்லாப் பிரச்னையைத் தீர்க்க ஏற்பாடுகள் செய்யப்படும்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் விவசாயத் தலைவர் திரு எஸ் பெரேரா பேசும்போது ஏழைவிவசாயிகளின் நலனைப் பேணி முதலாளித்துவத்தை வேரோடுகளைந்து நாட்டை சாலிசஅமைப்பில் கொண்டுவர எமது பிரதம மந்திரி பல ஏற்பாடுகளைச் செய்துவருகிருர் என்று கூறினர். திரு,பெரேரா தமிழில் பேசினுர்.

---

ரெங்காரொட்டி ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியருக்குக்கடிதம்

# சைப்பிரஸ் அரசியல் அமைப்பு

இன்றைய சூழ்நிலையில் சைப்பிரஸ் நாட்டு அரசியல் திட்டத்திலுள்ள ஒரு அம்சத்தைத் தலைவர்களின் கவனத்துக்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

அந்நாட்டு மக்களில் எண்பது வீதமானேர் கிரேக்கர், பதினெட்டு வீதமானேர் துருக்கர்.

(அ) அங்கே ஜனுதிபதி கிரேக்கராயும், உபஜனுதிபதி துருக்கராயும் இருப்பர்.

(ஆ) பத்துப் பேருள்ள மந்திரிசபையில் எழுவர் கிரேக்கராகவும் மூவர் துருக்கராகவும் இருப்பர்.

(இ) மக்கள் சபையில் எழுபது கிரேக்கரும் முப்பது துருக்கரும் அங்கம் வகிப்பர்,

(பிரித்தானிய கலைச்சொல் அகராதி) ஐக்கிய தேசியக் கட்சியும், ஐக்கிய முன்னணியும் தங்கள் ஆட்சிக்காலத்தில் பிரதேச அல்லது மாவட்ட சபைகளை அமைத்து அதிகாரத்தைப் பரவலாக்க இணங்கியுள்ளன. பொதுவான மக்கள் அடிப்படை உரிமைகளோடு சைப்பிரசில் உள்ளது போன்ற சில அம்சங்களையும் விசேடமாகச் சேர்த்துக் கொள்ள வேண்டுமென தமிழ்ப் பிரதிநிதிகள் வற்புறுத்தக் கூடுமானல் எல்லா இனமக்களுக்கும் ஆட்சியில் பங்கு கிடைப்பதாகவும் சமத்துவ உணர்வு வளர்ந்து நாட்டின் உறுதிப்பாடும் ஒற்றுமையும் நிலைப்பதாகவும் இருக்கும்,

அ. சுப்பிரமணியம்
6, சுவாமியார் வீதி,
யாழ்ப்பாணம்.

## இன்றைய பலன்

ஆடி மாதம் 10-ம் திகதி
[26-7-70]

மேஷம்- உறவினர் மத்தியில் ஒற்றுமை மலரும். எதிர்பார்த்ததைவிட அதிக பலன் கிடைக்கும். பொன்னுன தினம்

ரிஷபம்- இன்று அருளும் பொருளும் இணைந்து கிடைக்கும். பொன்னுன தினம், உறவினர்கள் உதவிக்கு ஓடிவருவர். செல்வாக்கு பெருகும்.

மிதுனம்- பின்னணியில் மோசடி வேலைகள் நடைபெறலாம். முன்யோசனையுடன் செயலாற்றுக.

கடகம்- பொன்னுன சந்தர்ப்பம் இன்று கிடைக்கும். தொழில்துறையில் புதிய வெற்றிகளும் உண்டு. இதயச்சுமை அகலும்.

சிம்மம்- புதுமையான எண்ணங்கள் தலைதூக்கும். புதிய அனுபவங்கள் கிடைக்கும். ஆனந்தநிலை.

கன்னி- பிரயாணத்தின் போது பொருள் தவறக்கூடும் சிலருக்கு உஷ்ண ரோகம்சம்பந்தமான நோய் ஏற்படும்,

துலாம்- தாம்பத்திய வாழ்வில் மகிழ்ச்சிகரமான சம்பவங்கள் இடம்பெறும். களஸ்திரவழியில் பொருள் வரவுக்கு இடமுண்டு.

விருட்சிகம்- கூட்டு வியாபாரத்தில் மோசடி நடக்கலாம். நன்ருக சிந்தித்ததன் பின்பு செயலாற்றுக.

தனு- தருமகாரியங்களில் தாராளமாக ஈடுபடுவீர்கள். சுற்றுடலில் மதிப்பு உயரும். தெய்வத்தின் துணையுண்டு.

மகரம்- பயன்தரும் பயணம் இன்று மேற்கொள்ளப்படலாம். பழைய நினைவு ...

## தற்காலிகமாக மூடப்பட்டது

கோட்டை, சனி

வெரஹெராவிலுள்ள இலங்கைப் போக்குவரத்துச்சபையின் ஜெர்மன் பயிற்சிக் கல்லூரி தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.

இக்கல்லூரியில் நடைபெறும் வேலைகள் பற்றி விசாரணை செய்வதற்கு மேற்படி சபை ஒரு குழுவை நியமிக்கவுள்ளது.

## "சோஷலிஸம் கடைச்சரக்கல்ல"

மாவிட்டபுரம், சனி

''சோஷலிசம் என்பது விலைக்கு உடனே வாங்கக் கூடியகடைப்பொருள் அல்ல மக்களின் பெருமுயற்சியாலும்தியாக உணர்வாலும் நாட்டுப்பற்றுலும் தான் சோஷலிசத்தை உருவாக்க முடியும்என்பதை எதிர்கால வாலிபர் சமுதாயம் உணர வேண்டும்'' என கிழக்கு ஜெர்மனியில் அரசியல் பட்டம்' பெற்று திரும்பியுள்ள திரு. எஸ். விஜயானந்தன். கந்தரோடை சனசமூக நிலையத்துக்கருகாமையில் நடந்த ...

ராணி ஜெமினி — சௌகார்ஜானகி

கொண்டிருந்தார்.


விபத்தினுல் மரணம் சம்பவித்ததாகத் தீர்ப்பளிக்கப்பட்டது.

கர்ணன்
(புதிய கொப்பி)

ராணி (யாழ்ப்பாணம்) தினசரி 3 காட்சிகள்
ஜெமினி — சௌகார்ஜானகி
நாகேஷ் — ஜெயந்தி
நடித்த
இரு கோடுகள்

வின்ஸர் (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
சிவாஜிகணேசன் இரு வேடங்களில்
பத்மினி - ராகினி - தங்கவேலு
நடித்த
உத்தமபுத்திரன்
(புதிய கொப்பி)

இப்பொழுது திரையிடப்படுகிறது!
கிங்ஸ்லி (கொழும்பு)
பிளாஸா (வெள்ளவத்தை
வெலிங்டன் யாழ்ப்பாணம்
திரைகளில்
தினசரி பி ப 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணி
(போயா, பிரிப்போயா காலை 10-30)



★ ஏ.வி.எம்.ராஜன்
★ சௌகார்ஜானகி
★ நாகேஷ் ★ குமாரிசச்சு
சாண்டோ எம். எம். ஏ. சின்னப்பதேவர்
★ கே. பி. சுந்தராம்பாள்
★ திருமுருக கிருபானந்தவாரியார்
மற்றும்பலர் நடித்த
'தெளிவில்லா இதயங்களைத் தெளியவைக்கும் தெய்வத் தமிழ்க் காவியம்'
துணைவன்
கதை வசனம் பாலமுருகன்
சங்கீதம் K.V. மகாதேவன்
தயாரிப்பு: சாண்டோ M. M. A. சின்னப்பதேவர்

கோப்பாய் நோக்கிப் போகும்போது (அல்லது எதிர்த்திசையில்) வைமன்வீதி, நாவலர் வீதி, நல்லூர் குறுக்குத்தெரு முதலியவற்ருல் செல்லுதல்வேண்டும். வடக்கில் இருந்து தெற்கு வரை வைமன் வீதி ஒருவழிப் பாதையாக அமையும். அத்துடன் அரசடி வீதி மேற்கில் இருந்து கிழக்குவரை (பலாலி வீதியில் இருந்து பருத்தித்துறை வீதி வரை) ஒருவழிப் பாதையாக அமையும்

### வாகனங்களை நிற்பாட்டி வைத்தல்

வழிபடுவோரின் வசதியை உத்தேசித்து வாகனங்களை நிற்பாட்டி வைப்பதற்காக 4 இடங்கள் ஒதுக்கி வைக்கப்படும். இந் நான்கு இடங்களையும் நன்கு பாவிக்குமாறு சாரதிகள் அனைவரும் வேண்டப்படுகின்றனர்,

### மேற்படி இடங்களாவன

1. அரசடி வீதி வழியாக கந்தசுவாமி கோவிலுக்கு வரும்வாகனங்களை அம்மன் கோவில் மைதானத்தில் நிற்பாட்டலாம்.
2. தென்பகுதியி லிருந்து கோவிலுக்கு வரும் வாகனங்களை கைலாசபிள்ளையார் கோவில் மைதானத்தில் நிற்பாட்டலாம்.
3. கோப்பாய்த் திசையிலிருந்து கோவிலுக்கு வரும் வாகனங்களை முத்திரைச் சந்தை மைதானத்தில் நிற்பாட்டலாம்.
4. பலாலி ரேட் / திருநெல்வேலி வழியாக கந்தசுவாமி கோவிலுக்கு வரும் வாகனங்களை திருநெல்வேலி சிவன்கோவில் வீதியில் நிற்பாட்டலாம்.

எஸ். பி. டீ. சில்வா.
உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்,
யாழ்ப்பாணம்.

பொலிஸ் அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
23-7-1970 2379

ஸ்ரீ காலிங்கன்
இணுவில்
தினசரி 6-30, 9-30மணி,
போயா, பிரிபோயா 2-30
சிவாஜி-ஜெயலலிதா
நடித்த
கலாட்டா கல்யாணம்

REGAL JAFFNA
Daily 4-45, 7 & 9-45 P.M.
Poya, Pre-poya 4 Shows
ROUGH NIGHT IN JERICHO
(Serial)

தொடுத்து நாட்டிலே சமாதா[illegible]ம் நிலவ முயற்சிகள் பல எடுத்துவருகின்ருேம். ஒவ்வொரு மத இன மக்களின் கலாச்சாரங்களைப் பேணிக்காக்க முன்வந்துள்ளோம்-

[illegible]வாறு அச்சுவேலி ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சிக் கிளையினரால் வழங்கப்பட்டவரவேற்புக் கூட்டத்தில் உதவிகலாச்சார அமை

MANOHARA
JAFFNA
Daily 4-45, 7-00 & 9-45 p m
Poya-Prepoya 10-30 a.m
Peter Sellers, Victor Mature
in
AFTER THE FOX

கின்ருேம். இதற்குப் [illegible] மக்களினது ஆதரவு [illegible]ளடைவில் கூடிக்கொண்டே வருகின்றது

வேலையற்ற பட்டதாரிகள் அனைவருக்கும் வருகிற ஆண்டு ஆரம்பத்தில் நம்பிக்கையாக வேலைவா[illegible]ப்பு ஏற்படும். இதற்கான முன்னேற் பாடுகளை நமது அரசாங்கம் செய்து வருகின்றது

கிராமம் கிராமமாகச்சிறு கைத்தொழிலை ஏற்படுத்தி உள்ளூர் உற்பத்திக்கு மதிப்பை ஏற்படுத்தி வேலையில்லாப் பிரச்னையைத் தீர்க்க தற்போது வழிவகுத்து வருகின்ருேம். அச்சுவேலி கைத்தொழில் பேட்டையும் அதி விரைவில் பூர்த்தியாக்கப்பட்டு இப் பேட்டையின்

[illegible] மந்திரி பல ஏற்பாடுகளைச் செய்துவருகிருர் என்று கூறினுர். திரு, பெரேரா தமிழில் பேசினுர்.

## ரெங்காரெட்டி காலமானுர்

ஹைதராபாத், ஜூலை 25

ஆந்திரா பிரதேசத்தின் முன்னுள் முதலமைச்சர் திரு. ரெங்காரெட்டி நேற்றிரவுகாலமானுர். அவருக்கு மரியாதை செலுத்து முகமாகஆந்திராவில் ஹைதராபாத், செகந்திராபாத் ஆகிய நகரங்களில் கொடிகள் அரைக்கம்பங்களில் பறக்கவிடப்பட்டுள்ளன.

[illegible]கள். சுற்ருடலில் மதிப்பு உயரும். தெய்வத்தின் துணையுண்டு.

மகரம்- பயன்தரும் பயணம் இன்று மேற்கொள்ளப்படலாம். பழைய நினைவுகள் தலைதூக்கும்.

கும்பம்- கூட்டுவியாபாரத்தில் முன்னேற்றம் உண்டு. வெளியூரிலிருந்து திருப்திகரமான செய்தி கிடைக்கும்.

மீனம்- குடும்பத்தில் சிறு பிணி தோன்றும். மனத்திடம் விரும்பத்தக்கது தெய்வநம்பிக்கைவேண்டும்

சோதிடக்கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

வேண்டும்'' என [illegible] ஜெர்மனியில் அரசியல் பட்டம்' பெற்று திரும்பியுள்ள திரு. எஸ். விஜயானந்தன். கந்த ரோடை சனசமூக நிலையத்துக்கருகாமையில் நடந்த கூட்டமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டார்.

திரு. எஸ் சுகேந்திரன் தலைமையில் நடந்த இக் கூட்டத்தில் அவர் தொடர்ந்துபேசுகையில். இலங்கைப் பொதுவுடைமைக் கட்சிக்கு ஐக்கியமுன்னணி அரசு ஏற்பட்டதில் முக்கியபங்குண்டு ஆகவே நாம் எமது பங்கைப் பலப்படுத்தி இவ்வரசுக்கு எம்மாலான ஆதரவை கொடுக்க முன்வரவேண்டும்'' என்ருர்.

இலங்கை திரைப்பட வரலாற்றில் புதிய சகாப்தம் உருவாக்கி
சங்குமுழங்க உதயமாகிறது
யாழ். வின்ஸர் வெண்திரையில்
31-7-70 முதல் குதுகல ஆரம்பம்
★ குமாரி ராஜும் புவனேந்திரன்
★ லடீஸ் வீரமணி
★ 'அடங்காப்பிடாரி' புகழ் நடராசா
நடித்த
மீரு மூவிஸ்
வெண்சங்கு
தயாரிப்பு, டைரக்ஷன்: டபிள்யு. எம். எஸ். தம்பு
இலங்கையின் இயற்கைக் காட்சிகளைக் கொண்டு உருவாக்கப்பட்ட சித்திரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேற்காஸிய அமைதி

# அமெரிக்க யோசனைகளுக்கு நாஸர் இணக்கம்

## அமைதி ஏற்படும் என்பதில் இன்னும் சந்தேகம் தீரவில்லை

கெய்ரோ, ஜூலை 25

மேற்காசியாவில் அமைதி ஏற்படுவதற்கு அமெரிக்கா தெரிவித்த யோசனைகளை ஐக்கிய அரபுக்குடியரசு அதிபர்ஏற்றுக்கொண்டுள்ளார் அமெரிக்க யோசனைகளை நாம் ஏற்று கொண்ட போதிலும் இதனல் மேற்காசியாவில் அமைதி ஏற்பட்டுவிடுமென்றும் நம்பவில்லை என்று அதிபர் நாஸர் டெலிவிஷன் பேட்டியொன்றில் கூறினர்.

மேற்காசியாவில் அமைதி ஏற்படுவதற்குத் தகராறில் சம்பந்தப்பட்ட இருதரப்பினரும் மூன்று மாதங்களுக்காவது சண்டையை நிறுத்திவிட்டு பேச்சுவார்த்தைகளில் ஈடுபடவேண்டுமென்று அமெரிக்கா ஒரு மாதத்திற்குமுன்னர் ஒரு யோசனை கூறியது இந்த யோசனை பற்றி ஐக்கிய அரபுக் குடியரசு அதிபர் கருத்து வெளியிடுகையில் இந்த யோசனையை எகிப்து ஏற்றுக் கொள்ளத் தயார் என்று குறிப்பிட்டார்

இந்த யோசனையை நாம் ஏற்ற கொண்டாலும் இஸ்ரேல் ஏற்றுக்கொள்ளும் என்று எதிர்பார்க்க முடியாது என்ருர் அவர்.

இஸ்ரேல் என்ன சொல்கின்றது என்பதை இப்பொழுது எதிர்பார்த்துக் கொண்டிருப்பதாகக் கூறிய அதிபர் நாஸர் இந்த யோசனையை இஸ்ரேல் ஏற்காவிடில் மேற்காசியாவில் அமைதி ஏற்படுவது சாத்தியமில்லையென்பது மட்டுமல்ல, அரபுநாடுகள் இஸ்ரேலுடன் ஜீவமரணப் போராட்டம் ஒன்றை நடத்தியே ஆகவேண்டியிருக்கும் என்ருர்.

அதிபர் நாஸரின் கூற்றை பாலஸ்தீன விடுதலை இயக்கங்கள் குறைகூறியுள்ளன.

பாலஸ்தீன விடுதலைக்கு அரசியல் தீர்வு ஒன்றை நாம் விரும்பவில்லை. பாலஸ்தீனத்தின் விடுதலையைப் போராட்டம் மூலமே நாம்

### கிரேக் எச்சரிக்கை

கிரேக்க நாட்டில் அரபுக் கொமாண்டோ நடவடிக்கைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கும்படி அந்த நாட்டு அரசாங்கம் அரபுநாடுகளை அறிவித்திருக்கின்றது

சமீபத்தில் கிரேக்க விமானம் ஒன்றைக் கைப்பற்றினர்களென்ற குற்றச்சாட்டின் பேரில் 7 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அரபுக் கொமாண்டோக்கள் தமது நடவடிக்கைகளை கிரேக்க நாட்டில் வைத்துக்கொள்ளக் கூடாது தொடர்ந்து அவர்கள் இவ்வாறு நடந்துகொண்டால் பாரதூரமான விளைவுகள் ஏற்படலாமென்று கிரேக்க அரசாங்கம் அரபுகளுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது.

## லிபியாவில் சதி முயற்சி

லிபியாவில் அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்கு மீண்டும் ஒரு சதி முயற்சி மேற்கொள்ளப்பட்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக லிபியா அதிபர் கேணல் கடாஃபி அறிவித்திருக்கிருர்

தமது அரசைக் கவிழ்ப்பதற்கு நடைபெறுவிருந்த சதி முயற்சி கண்டுபிடிக்கப்பட்டு முறியடிக்கப்பட்டிருப்பதாகவும் இதுசம்பந்தமாக 11 பேர் கைதுசெய்யப்பட்டிருப்பதாகவும் கேணல் கடாஃபி கூறினர். இவர்கள் மீது விசாரணை நடத்

### ''மொழிப்பிரச்னைக்கு தீர்வுகாண இளைஞர்களால்தான் முடியும்''

கோட்டயம், ஜூலை 25

'முதியவர்களைவிட இளைஞர்களால்தான் மொழிப்பிரச்னையைப் புத்திபூர்வமாக அணுகி, புத்திபூர்வமான தீர்வைக் கண்டு பிடிக்கமுடியும்.

அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் கென்மன்டல் முகாமைத் தொடக்கிவைத்துப் பேசுகையில் திரு. சி. சுப்பிரமணியம் குறிப்பிட்டார்,

மொழிப்பிரச்னை கு எல்லோரும் ஏற்கக்கூடியவகையில் தீர்வுகாணப்படாவிடில் உணர்ச்சிபூர்வமான மோதலுக்கு இடமளிக்கும் ஒரு நிலை நீடிக்குமெனவும் அவர் குறிப்பிட்டார்.

### காந்திசிலையை உடைத்தனராம்

### 2 நக்ஸல் பாரிகள் கைது

சென்னை, ஜூலை. 25

சென்னையில் மூலக் கடையில் உள்ள மகாத்மாகாந்தி சிலையை உடைத்ததாகக் கூறப்படும் இரு நக்ஸல் பாரிகளைப் பொலிசார்கைது செய்துள்ளனர். சிலையை உடைத்த அவர்கள் சிலை அமைக்கப்பட்ட பீடத்தில்

### விமான விபத்தில் இருவர் பலி

அலகாபாத், ஜூலை 25

கான்பூர் விமான கிளப்பைச்சேர்ந்த விமானமொன்று நகரிலுள்ள தேவமாதா தேவாலயத்தின்வளவினுள் வீழ்ந்து நொறுங்கியதில் பயிற்சியாளரும், பயிற்சியளிப்பவரும் பரிதாபமாக மாண்டனர்.

விமானம் மிகவும் தாழ்வாகப்பறந்துகொண்டிருந்திதாகவும் நிலத்தில் விழுந்ததும் தீப்பிடித்துக்கொண்டதாகவும் அறிவிக்கப்பட்டது.

பிரதமரின்

### வாழ்த்துச் செய்திக்கு ஈராக் நன்றி

கொழும்பு, சனி

ஈராக்தேசிய தினத்தை ஒட்டி இலங்கையின் பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா அனுப்பிவைத்த நல்லெண்ணி வாழ்த்துச் செய்திக்கு அந்நாட்டு அரசாங்கம் நன்றி தெரிவித்துள்ளது.

அச்செய்தியில் கூறியுள்ளதாவது: உங்களது நல்லெண்ணமும் ஆசியும் கொண்ட வாழ்த்துச் செய்திக்கு எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்ருேம்: தங்களது மன மகிழ்வு போல நாமும் மன நிறைவும் மகிழ்ச்சியும் கொள்கின்ருேம்.

### புங்குடுதீவு ம.வி மாணவன்

புங்குடுதீவு, சனி

கொழும்பு சுகததாஸ விளையாட்டரங்கில் நடைபெறவிருக்கும் அகில இலங்கை விளையாட்டுப்போட்டிகளில் புங்குடுதீவு மகாவித்தியாலயத்தைச்சேர்ந்த மாணவன் செல்வன் கே.சத்தியகுமார் வித்தியாலய சார்பில் கலந்துகொள்ள விருக்கிருர் செப்டம்பர் மாதம் [illegible] திகதி இப் போட்டி நடைபெறும்.

ஆசிரியர் [illegible]

### சாட்சியமளிக்க

# 'காமன்வெல்த் சின்னுபின்னமாகும்'

## உகண்டா அதிபர் எச்சரிக்கை

லண்டன், ஜூலை 25

தென்னுபிரிக்காவுக்கு பிரிட்டன் ஆயுதம் விற்குமானல் காமன்வெல்த் சின்னுபின்னமாகிவிடும் என்று உகண்டா அதிபர் ஒபட்டே எச்சரித்திருக்கிருர்.

தென்னுபிரிக்காவும் பிரிட்டனும் அத்திலாந்திக் சமுத்திரததில் கடற்படை கூட்டு பயிற்சிகளை விரைவில் நடத்தவிருக்கின்றன.

தென்னுபிரிக்காவுக்கு பிரிட்டன் ஆயுதம் வழங்க விருப்பது குறித்து உலகம் முழுவதிலும்எதிர்ப்பு வழர்ந்திருப்பதினல் இந்தக்கடற்படை ஒத்திகை குறித்தும் பெரும் எதிர்ப்புகள் ஏற்படலாம் என்று கருதப்படுகின்றது.

தென்னுபிரிக்காவுக்கு பிரான்ஸ் வழங்கும் நீர்மூழ்கிக்கப்பல்களில் முதலாவது நீர்மூழ்கி. தென்னுபிரிக்காவுக்கு வந்துசேர்ந்துள்ளது

# ஜப்பான் போல் இலங்கை முன்னேற...

மட்டுவில், வெள்ளி

ஜப்பான் தேசம் இன்று குறுகிய காலத்தில் உலக நாடுகளே அதிசயிக்க கூடிய நிலையில் பல துறைகளிலும் முன்னேறிவருவதற்குக் காரணம் அந்தநாட்டுமக்கள் மனித வளத்தை பெருக்குவதற்கு காட்டிய அதி அக்கறைதான் எமது நாடு போன்ற அபிவிருத்தி அடைந்து கொண்டுவரும் நாடுகள் பொருளாதார அபிவிருத்தியைப் பெருக்கும் கூட்டுறவு முறையில் தொழிலாளர்களைப் பயிற்றுவிக்க வேண்டும்என்பதை அறிந்து கொள்ளவேண்டும்.

இவ்வாறு தென்மராட்சி பல நோக்குக்கூட்டுறவுச் சமாச கூட்டுறவு தினவிழாவில் கலந்துகொண்டு உரை நிகழ்த்திய கூட்டுறவு கல்லூரி அதிபர் திரு. பரமோதயம் பேசும்போதுகூறினர். திரு. கே. திரவியநாயகம் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் திரு. பரமோதயம் தொடர்ந்து பேசியதாவது.

ஜப்பான் தேசம் துரிதமாக வளர்ச்சி பெற்றதற்கு நான்கு காரணங்கள் உண்டு நமது ஆற்றலை ஆராய்ந்து செயலாற்றுதல், சாதி மத பேதமற்ற ஒன்றுபட்ட சமுதாயத்தை உருவாக்குதல், சமதர்ம தேவைக்கு ஏற்றவாறு உதவுதல், சமதர்ம கோட்பாட்டின்படி எமது நாட்டின் பொருளாதார அபிவிருத்தி[illegible] செய்தல் போன்ற அம்சங்களை [illegible]டைப்பிடித்தால் எமது நாடும்முன்னேற்றமடைவது திண்ணம்.

இன்றைய நிலையிலே நாம்

முறையில் செயற்பட்டு பொருளாதாரத்தை வளர்த்துக் கொள்ளவேண்டும்.

### தென்னைபயிரிட காணி

அல்லைப்பிட்டி, சனி

வேலணை அராலிவெளியில் உள்ள முடிக்குரிய நிலத்தில் மூன்நூறு ஏக்கர் காணியை தென்னைப்பயிர்ச் செய்கைக்காகவழங்குவதற்கான காணிக்கச்சேரி தீவுப்பகுதி காரியாதிகாரி கந்தோரில் நடைபெற்றது. சுமார் நாநூது பேர் இதற்கு விண்ணப்பஞ் செய்திருந்தனர் வேலணை கிராமசபை மக்களுக்கு மட்டும் இது வழங்கப்படும்.

### சிரமதானம்

கைதடி, சனி

கைதடி 2-ம் வட்டாரத்திதுள்ள நேவவத்தை ஒழுங்கை சிரமதானமூலம் செப்பனிடப்பட்டது. கைதடி சனசமூகநிலையத்தினரால் ஒழுங்குசெய்யப்பட்ட சிரமதான வேலையில் சுமார் 60 பேர் பங்குபற்றினர். வட்டார உறுப்பினர் திரு. வி. செல்லன் தலைமையில் சிரமதான வேலைநடைபெற்றது.

### நிதியுதவி

கைதடி, சனி

கைதடி முத்துக்குமார வித்தியாசாலையைச்சேர்ந்த ஆசிரியர்கள் தங்களது ஒருநாள் சம்பளத்தை நாட்டைக்காக்கும்நிதிக்குவழங்கியுள்ளனர்.

# 'சமயம் காக்கும் செயலில் ஈடுபடுக'

மாவிட்டபுரம், சனி

சைவ சமயம் இன்று ஒரு இக்கட்டான நிலையில் அகப்பட்டுதத்தளிக்கிறது ஆகவே சமயம் காக்கும் செயலில் நாம் ஈடுபடவேண்டும். தேர்தல் காலத்தில் நான் அந்தக் கட்சி, நீ இந்தக்கட்சி என்று சண்டை பிடித்தோம் ஆனல் இந்நிலையில் கட்சிகளை மறந்து 'சைவர்கள்' நாம் என்ற மனப்பான்மையுடன் செயலாற்றவேண்டியது கடமையாகும்.

இவ்வாறு வேதாகம சைவ சித்தாந்த சபைத் தலைவர் பிரமஸ்ரீ கு. பாலசுந்தரக் குருக்கள் மாவைக்கந்தன் ஆலய முன்றலில் வெள்ளிக்கிழமை மாலை நடந்த கூட்டம்ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் கூறினர்.

கூட்டத்துக்கு முன் ஆலய முன்றலில் பஜனை நடந்தது. அதையடுத்து வீதியைச் சுற்றி மௌன ஊர்வலம் நடாத்தப்பட்டது. பிரமஸ்ரீ கு. பாலசுந்தரக்குருக்கள் மேலும் பேசுகையில்: 17 நாட்களுக்கு மேலாக பூட்டப்பட்டிருக்கும்ஆலயத்தின் விடயம் குறித்து எவராவது நடவடிக்கைஎடுத்தார்களா? அவர்களுக்கு இச்சமயம் வளரவேண்டும் என்ற அக்கறை இல்லாததால் தான் இதைதிரும்பிக்கூடப்பார்க்கவில்லையென்று கூறினர்.

திரு. வி. சுந்தரலிங்கம் பேசுகையில்' மாவைக் கந்தரின்பெருமையும், வைராக்கியமும் உலகம் அறிந்தவையாகும். அவர் கருணைகாட்டுகிருர். அவர் எப்பேது கருணை பூர்த்திசெய்கிருர் என்பதில்தான் அவருக்கு பூசை நடாத்துவது தங்கியிருக்கிறது. 68-ம் ஆண்டு நெருக்கடியான நிலையிலும் எம்மை உற்சவம் சிறப்பாக நடாத்த உதவிய முருகன் இனியும் உதவுவார் என்பது வெளிப்படையாகும் என்ருர்

பிரமஸ்ரீ சு. து. சண்முகநாதக்குருக்கள் பேசுகையில் சைவ சமயத்தை இந்நாட்டிலிருந்து குறிப்பாக காங்கேசன்துறை தொகுதியில் இருந்து அழிக்க திட்டமிட்டு சிலர் செயலாற்றிவருகிருர்கள்.

பிராமணர்களை சிறைவைத்தால் அவர்கள் மனம் இளகி ஆலயத்தை திறக்க சம்மதம் அளிப்பார்கள் என்று சிலர் கருதி எம்மை சிறைவைக்க முனைகிருர்கள். ஆனல் எம்மை சிறைவைத்தாலும்சரி, அல்லது எவர்தான் எம்மை பயமுறுத்தினலும் சரி, அநீதியான முறையில் ஆலயக் கதவு திறக்கப்படவே மாட்டாது என்ருர்.

பண்டிதர் கந்தையா, பண்டிதர் வே. சங்கரப்பிள்ளை உட்படப் பலர் உரையாற்றினர்கள்.

# வீட்டில் தனித்திருந்த பெண் வெட்டிக்கொலை

## ஒருவர் கைது

புத்தளம், சனிகூறப்படுகிறது.

வீட்டிற்குள் புகுந்த வாலிபர் ஒருவர் வீட்டில் தனித்திருந்த நாற்பது வயதானமைமுஉம்மாஎன்ற பெண்ணைமன்னக் கத்தியால் வெட்டிக்கொலை செய்ததாகக் கூறப்படும் சம்பவம் புத்தளம் வட்டாரத்தைப் சேர்ந்த புத்தளம்-சிலாபம் வீதியில் நடைபெற்றுள்ளது.

காலஞ்சென்றபெண்ணின் கணவனுக்கும் சந்தேகநபரின் குடும்பத்துக்குமிடையே நெடுநாளையாக பகைமைஇருந்து வந்ததாகவும் இக்கொலைக்கு இதுவேகாரணம் என்றும்

இது சம்பந்தமாக 24 வயது வாலிபர் ஒருவர் சந்தேகத்தின் பேரில்கைது செய்யப்பட்டுள்ளார். பொலிஸார் தொடர்ந்து புலன் விசாரணை செய்து வருகின்றனர்,

### உற்சவம்

அல்லைப்பிட்டி, சனி

பிரசித்தி பெற்ற வேலணை

### மாணவர் அவதி

அல்லைப்பிட்டி, சனி

அண்மையில் மகாவித்தியாலயமாக தரமுயர்த்தப்பட்ட வேலணை மகாவித்தியாலயத்தில் தளபாடவசதிக் குறைவினல் மாணவர் பெரிதும் கஷ்டமுறுகின்றனர். இது சம்பந்தமாக மேலதிகாரிகளுடன் தொடர்பு கொண்டபோதிலும் இது

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

பாலஸ்தீன விடுதலை இயக்கங்கள் குறைகூறியுள்ளன.

பாலஸ்தீன விடுதலைக்கு அரசியல் தீர்வு ஒன்றை நாம் விரும்பவில்லை. பாலஸ்தீனத்தின் விடுதலையைப் போராட்டம் மூலமே நாம் பெறுவோம் என்று கொமாண்டோ இயக்கத் தலைவர்கள் அறிவித்துள்ளனர்.

சதி முயற்சி கண்டுபிடிக்கப்பட்டு முறியடிக்கப்பட்டிருப்பதாகவும் இதுசம்பந்தமாக 11 பேர் கைதுசெய்யப்பட்டிருப்பதாகவும் கேணல் கடாஃபி கூறினார். இவர்கள் மீது விசாரணை நடத்தப்பட்டு விரைவில் தண்டனை விதிக்கப்படுமென்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

# தனியார்துறை ஊழியர் நலன்களைக் கவனிக்ககமிட்டி

கோட்டை, சனி

தனியார்துறை ஊழியர்களுக்கு சிறந்த எதிர்காலம் உருவாகுகிறது. இவர்களுக்கென கமிட்டிகளை நிறுவி அவற்றை நடைமுறைப்படுத்த தொழில் அமைச்சர் திரு. மைக்கேல் சிறிவர்த்தன நடவடிக்கை எடுத்துள்ளார்.

தொழிலாளர்கள் வேலை செய்யும் சூழல்களையும் தோட்டப் பயிர்ச்செய்கைத் தொழிலாளர்களின் வேலை செய்யும் சூழல்களையும் ஆராய்வதற்கு 10 பேர் கொண்ட கமிட்டி ஒன்றையும் தொழில்அமைச்சர் நியமித்துள்ளார். செப்டெம்பர் முதலாம் திகதி இக்கமிட்டி தனதுஅறிக்கையை தயாரித்துவிடும்.

இக்கமிட்டி பின்வரும்விடயங்களை ஆராயும்.

■ தொழிலாளர் சட்டங்களைத் திருத்தியமைத்தல்

■ தொழிலாளர்களின் நிரந்தர வேலைக்கு வாய்ப்பளித்தல்.

■ எவ்வித ஏற்றத் தாழ்வுமின்றி சுயபாஷையில் கற்றவர்களுக்கு வேலைவாய்ப்பளித்தல்.

■ 1966-ம் ஆண்டு ஜனவரி 8-ம் திகதி வேலைநிறுத்தம் செய்தவர்கள் உட்பட 1965 ஏப்ரல் மாதத்திற்குப் பின், தொழிற்சங்க நடவடிக்கைக்காக தண்டிக்கப்பட்டவர்களை திரும்பவும் வேலைக்கு அமர்த்துதல்.

■ தோட்டப்பயிர்ச் செய்கை ஊழியர்களின் தொழிற் சங்க உரிமைகள்

முன்னுள் தொழிற்சங்க ஆணையாளர் திரு. எம் இராசநாயகம் இக்கமிட்டிக்குத் தலைவராவர்.

## குடிபெயருமாறு உத்தரவு

விஸ்வமடு, ச

10 வருடங்களுக்கு முன்பு பரந்தன்-முல்லைத்தீவு ரோட்டில் மத்திய வகுப்பினருக்கு வழங்கப்பட்ட அரை ஏக்கர் காணிகளில் அத்துமீறிக் குடியேறியவர்களைக் குடிபெயருமாறு கோரப்படுகின்றதாம்.

பொலிசாரின் உதவியுடன் காணிச் சொந்தக்காரர் இவ்வித உத்தரவைப் பிறப்பித்துள்ளனர் எனத் தெரிகிறது.

## ஒன்றுசேர ஆலோசனை

யாழ்ப்பாணம், ஞாயிறு

அகில இலங்கையிலுமுள்ள ஸ்தலஸ்தாபனத் தொழிலாளர்களை ஒரே திணைக்களத்தின்மூலம் பரிபாலிக்க வேண்டுமென்னும் தீர்மானத்தை ஆராய்வதற்காக யாழ். மாவட்டத்தைச்சேர்ந்த ஐக்கிய இலங்கை ஸ்தலஸ்தாபனத்தின் தொழிலாளர் சங்க 42 கிளைகளின் பிரதிநிதிகள் நாளை மாலை 3 மணிக்கு யாழ் மலாயா கபே மேல்மாடியில் கூடுகின்றனர்.

## மருமகளிடம் சோறுகேட்ட மாமனுர் தற்கொலை

யாழ்ப்பாணம், ஞாயிறு

மருமகளிடம் சோறு கேட்ட ஒரு மாமனுர், அவர் சோறு இல்லை என்று கூறவே நச்சுத் திராவகம் அருந்தித் தற்கொலை செய்துகொண்டார். இச்சம்பவம் நல்லூர் வடக்கில் நடைபெற்றது.

அப்பாசி இராசையா (வயது 59) என்பவரே இவ்விதம் மரணமானவர் இராசலட்சுமி என்ற தனது மருமகளின் வீட்டுக்குச் சென்று சோறு கேட்டதாகவும், சோறு இல்லை என்று கூறவே மருமகளை வெட்டுவதற்குக் கத்தியை எடுத்து விரட்டியதாகவும், விசாரணையில் கூறப்பட்டது மருமகளின் கூக்குரல் சத்தம் கேட்டு அயல் வீட்டார் அங்கு பெருந்திரளாக ஓடிவந்த போது, வெட்கம் தாழாது மாமனுர் வீட்டு அறையைப் பூட்டிவிட்டு, நச்சுத்திராவகம் அருந்தியதாக விசாரணையில் தெரியவந்தது.

திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. இராசநாயகம் விசாரணை நடத்தினுர். மருமகளான இராசலட்சுமியும், பா. யோகம்மாவும் சாட்சியமளித்தனர். தற்கொலை எனத் தீர்ப்பளிக்கப்பட்டது. [கு. வி. ம.]

யில் உள்ள மகாத்மாகாந்தி சிலையை உடைத்ததாகக் கூறப்படும் இரு நக்ஸல்பாரிகளைப் பொலிசார் கைது செய்துள்ளனர். சிலையை உடைத்த அவர்கள் சிலை அமைக்கப்பட்ட பீடத்தில் 'மாவோ' கோஷங்கடளங்கியபிரசுரங்களை ஒட்டினுர்களாம்.

அய்யனுவரத்தில் வசிக்கும் ராகவன் (வயது 30) ராமபுரத்தில் வசிக்கும் வேலாயுதம் (வயது 49) ஆகிய இருவருமே கைதுசெய்யப்பட்டவர்களாவர்.

## பௌத்தமத ஆலோசனைக்குச் சங்கம்

கோட்டை, சனி

பௌத்த சமயக் கலை கலாச்சார விடயங்களில் அரசாங்கத்திற்கு ஆலோசனை கூறுவதற்காக குழுவொன்றைகலாச்சார அமைச்சர் திரு எஸ். எஸ். குலதிலக்கா நியமித்துள்ளார். 50 பேரைக் கொண்ட இக் குழுவில் 25 பிக்குகள் அங்கம் வகிக்கின்றனர். மல்வத்தை, அஸ்கிரியா உட்பட பௌத்த பீடங்களைச் சேர்ந்த தேரோக்கள் இக் குழுவில் அடங்குவர்.

இலங்கை பௌத்த காங்கிரஸ், மகாபோதிசங்கம், பௌத்த இளைஞர் சங்கம், சாசனசேர சங்கம் ஆகிய சங்கங்களின் பிரதிநிதிகளே மற்றைய அங்கத்தவர்களாவர்.

## சிறுமியின் சங்கிலியை அறுத்தாராம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

சிறுமியொருவரின் கழுத்திலிருந்ததங்கச் சங்கிலியை அறுத்துச் சென்ற ஒருவரை வேலைக்காரச் சிறுவன் அரைமைல்தூரம் ஓடிச் சென்று பிடித்து பொலிசில் ஒப்படைத்தான்.

யாழ் மாநகரசபை இரண்டாம்வட்டார உறுப்பினர் திரு. எம். எஸ். பேரின்பநாயகம்வீட்டில் இச்சம்பவம் நடந்தது.

யாழ் குற்றத்தடுப்புப் பொலிஸ் சார்ஜண்ட் திரு தாமோதரம்பிள்ளை விசாரணை நடத்தியபோது சங்கிலியை அறுத்துச் சென்ற வாலிபருக்கும், சில சைக்கிள் களவுகளுக்கும் தொடர்பிருப்பது தெரியவந்தது. விசாரணை தொடர்கிறது

(உடுப். நிருபர்)

...ம் திகதி இப் போட்டி நடைபெறும்.

## ஆசிரியர் பிரச்னை

## சாட்சியமளிக்க ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஞாயிறு

பதவிஉயர்வு, மாற்றம், நியமனம் சம்பந்தமான விசாரணைக்குழு முன் சாட்சியமளிக்க உயர்தர பயிற்றப்பட்ட ஆசிரியர் சங்க வடபிரதேச கிளை தயார் செய்து வருகின்றது.

இவற்ருல் பாதிக்கப்பட்ட உயர்தர பயிற்றப்பட்ட ஆசிரியர்களின் விபரங்களை அனுப்பிவைக்குமாறு மேற்படி சங்கச் செயலாளர் கேட்டுக்கொண்டுள்ளார்.

## ச. ச. நிலைய ஆண்டுவிழா

யாழ்ப்பாணம், ஞாயிறு

பண்டத்தரிப்பு திருக்குறள் சனசமூக நிலையத்தின் முதலாவது ஆண்டுவிழா அடுத்தமாதம் ஒன்பதாம் திகதி கொண்டாடப்படவுள்ளது. இவ்விழாவை யொட்டி 25 மைல் சைக்கிளோட்டப் போட்டியும், பத்துமைல் மரதன் ஓட்டப் போட்டியும் கலைநிகழ்சிகளும் இடம் பெறவுள்ளன.

## தீர்மானம்

மாவிட்டபுரம், சனி

திரு. எஸ் டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயகாவின் சிரார்த்த தினமான செப்டம்பர் 26-ந் திகதியைப் பகிரங்க விடுமுறை தினமாக்க வேண்டுமென அமைச்சரைக் கோருவதென்ற தீர்மானம் ஏழாலை வள்ளுவர் சனசமூகநிலையக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது. திரு. எஸ். குணரத்தினம் தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

## உபதலைவராகத் தெரிவு

மாவிட்டபுரம், சனி

மல்லாகம் கிரமசபை உபதலைவராக திரு. தாமோதரம்பிள்ளை ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார்.

மல்லாகம் கிராமசபை மண்டபத்தில் தலைவர் திரு. வி. பொன்னம்பலம் தலைமையில் நடந்த கூட்டத்தில் முன்னுள் கிராமசபைத் தலைவரும் இளைப்பாறிய கிராம சேவையாளருமான திரு. தாமோதரம்பிள்ளை ஏகமன்தாகத் தெரிவு செய்யப்பட்டார்.

எமது நாட்டின் பொருளாதார அபிவிருத்தியை செய்தல் போன்ற அம்சங்களை கடைப்பிடித்தால் எமது நாடும்முன்னேற்றமடைவது திண்ணம்.

இன்றைய நிலையிலே நாம் நமது நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு அரசாங்கத்தையே நம்பியிருந்தால் எதுவும் நடைபெறப்போவதில்லை. நாம் கூட்டுறவு

## விசேஷ ரயில்சேவை

கோட்டை, சனி

வருகிற ஆகஸ்ட்மாதம் 2ம் திகதி அரசாங்க விடுமுறையை முன்னிட்டு இலங்கைப் புகையிரதசேவையில் விசேடஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

இம்மாதம் 31ம் திகதி நண்பகல் 12-55 மணிக்கு கொழும்பிலிருந்து விசேஷ ரயில் சேவை நடைபெறும். மறுதினம் 1ம் திகதி காலை 5-35 மணிக்கு காங்கேசன் துறையிலிருந்து உத்தர தேவி புறப்பட்டு கோட்டை செல்லும்

2ம் திகதி காலை 5-35மணிக்கும், மாலை 8-25 மணிக்கும் காங்கேசன்துறையிலிருந்து விசேஷ ரயில் சேவை கொழும்புக்கு நடக்கும்.

## 'எல்லோரும் ஏன் பயன்பெறவில்லை'

யாழ்ப்பாணம், ஞாயிறு

ஆண்டவன் சந்நிதானத்திற்குச் செல்கின்ரேம்: இவ்வாறு கோவிலுக்குச் செல்பவர்களுக் கெல்லாமே இறைவன் அருள் கிடைத்துவிடுகின்றதா? இந்தக் கேள்வி நம்மிடை எழுகின்றது. காவடி எடுத்தும், அர்ச்சனை செய்தும் பிரதிஷ்டை செய்தும் ஏன் அவர்கள் பயன் பெறவில்லை. இதற்கு அடிப்படையாக அமைந்தது நாம் இறைவனிடத்து மனப்பூர்வமான பக்தியைக் கொடுக்கவில்லை என்பதுதான்

இவ்வாறு சைப் பெரியார் திரு. எம். வைரமுத்து நேற்றுமுன் தினம்கோட்டை முனிஸ்வரன் ஆலயத்தில் உரையாற்றும் போது குறிப்பிட்டார்

கடந்த இருபது தினங்களாக நடைபெற்ற முனீஸ்வர ஆலய ஸஹஸ்ர அபிஷேகத்தின் சங்காபிஷேக நிறைவு விழா கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

திருத்தொண்டர் கூட்டமென்ற தொடரில் அருட்கவி விஞசித்தம்பி கதாப் பிரசங்கத்தின் நிறைவுரையும் நடைபெற்றது.

கைதடி, சனி

கைதடி முத்துக்குமார வித்தியாசாலையைச் சேர்ந்த ஆசிரியர்கள் தங்களது ஒரு நாள் சம்பளத்தை நாட்டைக்காக்கும்நிதிக்குவழங்கியுள்ளனர்.

## புதிய அதிபர்

அம்பன், சனி

வரணி மகாவித்தியாலய அதிபர் திரு. வி. தங்கராசா நாகர்கோயில் மகா வித்தியாலய அதிபராக நியமனம் பெற்றுள்ளார்.

நாளையாக பகைமைஇருந்து வந்ததாகவும் இக்கொலைக்கு இதுவேகாரணம் என்றும்

## உற்சவம்


அல்லைப்பிட்டி, சனி

பிரசித்தி பெற்ற வேலணை பெருங்குளம் முத்துமாரி அம்மன் ஆலய வருடாந்த உற்சவம் அடுத்தமாதம் ஏழாந்திகதி கொடியேற்ற வைபவத்துடன்ஆரம்பமாகி பதினைந்திகதி தேர்தீர்த்த உற்சவத்துடனும், மறுநாள் நடைபெறும் பூங்காவன உற்சவத்துடனும் முடிவடையும்.

பட்ட வேலணை மகாவித்தியாலயத்தில் தளபாடவசதிக் குறைவினுல் மாணவர் பெரிதும் கஷ்டமுறுகின்றனர். இது சம்பந்தமாக மேலதிகாரிகளுடன் தொடர்பு கொண்டபோதிலும் இதுவரை கவனம் செலுத்தப்படவில்லையாம்.

வியாபாரம்பெருக விளம்பரம் செய்க





ஒரே முறையில் 3 கலன் தெளிக்கிறது.

ஹேஸ்ப்ரே 300 பி. ரி.

தட்டி விட்டதும் இயங்கும் சுலபமான விசையுடைய பீச்சு முனை கொண்டது.

பீச்சு முனையில் தட்டிவிட்ட மாத்திரத்தில் இயங்கும் புதிய தடுப்பு விசை உள்ளதால் வெளியே சிவிறப்படும் மருந்தின் அமுக்கத்தை குறைந்த அளவிலிருந்து கூடுதலான அளவுக்குக் கட்டுப்படுத்த ஏதுவாக்குகிறது. இது விசேஷமாக தேயிலையில், பயிர்களுக்குச் சேதம் விளையும் என்ற பயமில்லாமல் களைக் கொல்லிகளை தெளிக்கப் பயன்படுகிறது.

துரு தடுப்புப் பித்தளையில் உருவான 300 பி. ரி. பீச்சுக் குழாய் இரட்டை முனைகளைக் கொண்டுள்ளது. இதனுல் மருந்தை அகன்ற பரப்பளவிற்கு தெளிக்கலாம். அத்துடன், இடப்பக்கம் அல்லது வலப்பக்கம் இயக்குவதற்கு, சுழற்றக்கூடிய ஒரு நெம்புகோலும் உண்டு.

உதிரிப்பாகங்கள் எப்போதும் கிடைக்கும்.

VISION 74/70

தயாரிப்போர்:
ஹேலீஸ் லிமிட்
400, டீன்ஸ் ரோட்,
கொழும்பு 10.
தொலைபேசி:
96331

மணிவாக்கு

மற்றவர்களைப் பற்றித் தீர்ப்புக்கூறவேண்டாம், உங்களைப் பற்றித்தீர்ப்புக்கூறவேண்டும். அப்போதுதான் உண்மையில் மகிழ்ச்சியடைய முடியும். மற்றவர்களைப் பற்றித் தீர்ப்புக் கூற முயன்றால் இன்னலைத் தேடிக்கொள்ள நேரும்.

— மகாத்மாகாந்தி


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box: 49, Jaffna. Telephone: 889.

சாம்ப்பரணம் சாதாரண வருஷம் ஆடி மாதம் 10-ந் திகதி (26-7-70)


## தொழிற்சங்கம்

நாய் வாலை ஆட்டுவதற்கு மாறாக, வால் நாயை ஆட்டினால் எப்படியிருக்கும்? இப்படித்தான் நமது நாட்டில் சில தொழிற்சங்கங்களின் நிலையுமிருக்கிறது.

தொழிலாளர் நலனைப் பேணவும் அவர்களின் உரிமைகளைப் பாதுகாக்கவும் தான் தொழிற்சங்கம் ஏற்பட்டது. துரதிர்ஷ்டவசமாக நமது நாட்டில் அரசியல் கட்சிகளின் கட்டுப்பாட்டில் தான் தொழிற்சங்கங்கள் பலவும் இயங்குகின்றன. இதன் விளைவாக அரசியல் கட்சிகள் தங்கள் நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்ளவும் தங்கள் செல்வாக்கை அதிகரித்துக் கொள்ளவும் தொழிலாளரையும் தொழிற்சங்க இயக்கத்தையும் பயன்படுத்துகின்றன. 7 தொழிலாளர் சேர்ந்தால் ஒரு தொழிற்சங்கம் அமைத்துக்கொள்ள இப்போதுள்ள சட்டவிதிகள் வசதியளிக்கின்றன. இதனால் ஒரு தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களே பல தொழிற்சங்கங்களில் அங்கம் வகிக்கமுடியும். அரசியல் கட்சிகள் தங்கள் செல்வாக்குக்காக ஒவ்வொரு தொழிலிலும் பல்வேறு தொழிற்சங்கங்களை ஆரம்பிக்கின்றன அரசியல் கட்சிகளுக்கிடையிலுள்ள போட்டி தொழிற்சங்கங்களுக்கிடையிலும் ஏற்படுகிறது தங்கள் நலனையும் உரிமைகளையும் பாதுகாத்துக் கொள்வதற்காகத் தொழிற்சங்கங்களில் சேரும் தொழிலாளர், தொழிற்சங்கப் போட்டி காரணமாக வேறுபட்டு நிற்கின்றனர். இந்த வேற்றுமையினால் அவர்கள் தங்கள் உரிமைகளைக் கூடப் பெற முடியாமல் போய்விடுகிறது.

'மக்கள் அரசாங்கம்' ஆட்சிக்கு வந்ததும் இது எங்கள் அரசாங்கம் என்ற தொழிலாளரின் மகிழ்ச்சி, ''எதையும் செய்யலாம்'' என்ற தவறான மனப்போக்கை சில தொழிலாளர் மத்தியிலும் சில தொழிற்சங்கங்களிலும் ஏற்படுத்தியிருக்கிறது இதேசமயம் 'காற்றுள்ளபோதே தூற்றிக் கொள்வோம்' என்ற சில தொழிற்சங்கத் தலைவர்களின் கருத்தினால் தங்கள் தொழிற்சங்கங்களை வலுப்படுத்துவதில் ஈடுபட்டு அரசாங்கத்தையே ஆட்டிப்படைக்க முடியும் சம்பவங்களும் இடம்பெறுகின்றன. இதுதான்- ''வால் நாயை ஆட்டும்'' நிகழ்ச்சியாக சம்பவிக்கிறது. இதனால் அரசாங்க இலாகாக்களிலும் மற்றும் தொழிற்துறைகளிலும் ஒழுங்கும் கட்டுப்பாடும் குறைகிறது.

இந்த நிலை மாறவேண்டும். ஒரு தொழிலுக்கு ஒரு சங்கம் என்ற சட்டம் கொண்டுவரப்படவேண்டும். அப்போதுதான் அரசியல், தொழிற்சங்கப்போட்டி நீங்கவும் தொழிலாளர் ஒன்றுபடவும் அவர்கள் தங்கள் நலனையும் உரிமையையும் பாதுகாக்கவும்வழிபிறக்கும். ஒரு தொழிலுக்கு ஒரு சங்கம் என்ற ஏற்பாட்டை இன்றுள்ள அரசாங்கம் தான் செய்யமுடியும். தொழிலாளரே தமது நலன் கருதி இதை அரசாங்கத்திடம் வற்புறுத்த வேண்டும்.

## மொழி பெயர்ப்பு

சிங்களத்தைத் தமிழிலும் தமிழைச் சிங்களத்திலும் மொழிபெயர்க்கக் கூடியவர்கள் தான் அரசாங்க இலாகாக்களிலும் ...

முடியுமா?

பிரதிநிதிகளின் பேச்சு முழுவதுமாகப் பத்திரிகைகளில் வெளிவர, பத்திரிகைகளில் இடமிருக்காது. ஆட்சிமன்ற நட...

# ஒற்றுமைக்கும் அமைதிக்கும் சமத்துவமே ஒரே வழி

— செனட்டர் எஸ். நடேசன் —

அரசியல் நிர்ணய சபை அமைக்கத் தீர்மானம் கொண்டுவரப்பட்டு அரசியல் நிர்ணய சபை மக்கள் பிரதிநிதிகளால் அமைக்கப்பட்டுள்ளது இது ஒரு புரட்சியாகும், அதாவது நாம்இரத்தக்களரி இல்லாவிட்டாலும் ஒரு புரட்சியின் முதல் நிலையைக் கண்டுள்ளோம்.

மக்கள் புரட்சி செய்யும் உரிமையை எப்பொழுதும் உடையவர்களாகவுள்ளார்கள் அந்த உரிமையே தற்போது பிரயோகிக்கப்பட்டுள்ளது. இந்த உரிமையை அடிப்படை பிரத்தியேக சட்ட உண்மையாக ஏற்றுக்கொள்ளவேண்டும்.

தற்போதைய அரசியல் திட்டத்தின்கீழ் அமைச்சர்களாகவும், ஆட்சிமன்ற அங்கத்தவர்களாகவும் கடமையாற்றும் மக்களின் பிரதிநிதிகள் இன்று புதியதொரு அரசியல் திட்டத்தை வகுக்கக் கூடியுள்ளார்கள். அரசியல் நிர்ணய சபை இயங்குவது குறித்து ஓரளவு குழப்பம் ஏற்பட்டுள்ளது.

அரசமைப்பு விவகார அமைச்சர் மந்திரி சபையிலுள்ள ஓர் அமைச்சராவார் இவருக்கு அரசியல் நிர்ணய சபையில் இடமில்லை ஆனால் புரட்சிவாதியான, தற்போதைய புரட்சியின் முன்னணித் தலைவர்களில் ஒருவரான டாகடர் கொல்வின் ஆர். டி. சில்வா அரசியல் நிர்ணய சபையின் அலுவல்களைக் கவனிப்பதில் முக்கிய பங்கு வகிக்கிறார்.

தூய்மையான ஒருவர் நியமன அங்கத்தவர்கள் இவ்வரசியல் நிர்ணய சபையில் இருத்தல் காலவழு என்றே கருதுவர். ஆட்சிமன்றத்தில் அரசாங்க கட்சியினர் எதிர்கட்சினர், அமைச்சர்கள் ஆட்சிமன்ற காரியதரிசிகள் ஆகியோர் எந்தெந்த ஆசனங்களில் இருந்தார்களோ அதே ஆசனங்களிலேயே இச்சபை அங்கத்தவர்களும் அதாவது தாங்கள் முன்னர் இருந்த ஆசனங்களிலேயே அந்த ஆட்சிமன்ற ஒழுங்கிலேயே அமர்ந்திருக்கிறார்கள்.

அரசியல் நிர்ணய சபையின் தலைவர் இச்சபையின் தற்போதைய ஆசன ஒழுங்கமைப்பைமாற்றி அங்கத்தவர்களை அகரவரிசையொழுங்கில் அமர்த்துதல் விரும்பப்படத்தக்கதாகும்.

இத்தகைய மாற்றம் இலங்கையின் அரசியான இரண்டாவது எலிசபெத் மகாராணியின்மேல் விசுவாசம் கொண்டு சத்தியப்பிரமா...

தேசிய ஒற்றுமையையுருவாக்குவதற்கு முட்டுக்கட்டையாகவிருப்பது இந்நாட்டில் வாழும் பெரும்பான்மையினரான சிங்கள மக்களுக்கும் சிறுபான்மையினரான தமிழ் மக்களுக்குமிடையில் நிலவும் முரண்பாடுகளேயாகும். இந்த இரு இனங்களும் இரு வேறு மொழிகளைப் பேசுபவர்கள் இருவேறு மதத்தையனுஷ்டிப்பவர்கள், இரு வேறு வரலாற்றையும் பாரம்பரியங்களையும் கொண்டு விளங்குபவர்கள் எமது அரசியல் திட்டத்தையுருவாக்குவர்கள் இந்த ஜனநாயக உண்மையை எதிர்நோக்க வேண்டியவர்களாக வுள்ளார்கள்.

பெரும்பான்மை இனத்தவர்களின் மேம்பட்ட தன்மை சிறுபான்மை இனத்தவரின் விடுதலையோடு அதாவது அவர்களது உரிமையோடு சமரசமாகும் பிரச்னைக்கு தீர்வுகாணப்பட்டால் அன்றி தேசிய ஒற்றுமை ஏற்படவியலாது.

இந்தப் பிரச்னை இன மதங்களால் வேறுபட்ட மக்கள் ஒரு அரசின்கீழ் அமைதியாக வாழ்வதற்கு வழியைக் கண்டுபிடிக்கவேண்டிய அளவுக்கு வந்து விட்டது. 'அரசுக்குள் உண்மையான சமத்துவ ஆட்சி' நிலவுவதன் மூலமே இரு இனமும் ஒற்றுமையாக வாழலாம் என்பது யாவராலும் ஏற்கப்பட்டுள்ளது.

இவ் விடயமாக எல்லா சிந்தனையாளர்களதும், எழுத்தாளர்களதும் செயல்படுத்தத்தக்க, ஏகமனதான சிறு உலகநாடுகள் சபை பான்மையின் பிரிவின் அதிபராக விளங்கிய திரு பி, டீ அஸ்கறேற் உரையாற்றுகையில்பின் வருமாறு வெளியிட்டுள்ளார் 'பெரும் பான்மையினருக்கும் சிறுபான்மையினருக்குமிடையே அரசுக்குள் உண்மையான சமத்துவம் ஏற்படாமல் இந்த அமைதியான ஒற்றுமையான வாழ்வு ஏற்படாது என்பதை மனச்சாட்சி எங்களுக்கு எடுத்துக் கூறும்'.

நாட்டின் விவகாரங்களில் பெரும்பான்மை யினருக்குள்ள செல்வாக்களவு சிறுபான்மையினருக்கு இருப்பதையோ, அல்லது அரசாங்க சேவைகளிலும் மற்றும் சேவைகளிலும் இரு தரப்பினரும் சம அங்கத்துவம் வகிப்பதையோ, அல்லது சிறுபான்மை, பெறும்பான்மை யாகிய இரு சாராருக்கும் ஒரேயளவில் செலவு செய்வதையோ அல்லது அரசாங்க அறிக்கைகள் பலவற்றையும் இருபிரிவினரது மொழிகளிலேயும் பதிந்துவைப்பதையோ 'சமத்துவம்' என்று கருதிவிடக்கூடாது. அது இவற்றைக் கருதவில்லை.

சிறுபான்மை சமூகத்தைச் சேர்ந்த ஒரு பிரஜை அரசுடன் தொடர்புகொள்ளும்போது அவனுக்கு பெரும்பான்மை சமூகத்தைச்சேர்ந்தஒரு பிரஜைக்கு உள்ள சகலவசதிகளும் உரிமைகளும் வழங்கப்படவேண்டும் இவ்விடயததில் பெரும்பான்மைப் பிரஜை அனுபவிக்காகவசதியின்மைகளை இச்சிறுபான்மைப் பிரஜையும் அனுபவிக்க கூடாது.

எல்லாப் பிரஜைகளும் தற்கால நாட்டுரிமையைப் பொறுத்தளவில் சமமானவர்களாக விருக்கவேண்டும் இது சமத்துவத்தின் ஒரு நோக்கமாகும் இன்று வடமாகாணத்தில் சில ஜாதி மக்களுக்கு உயர்ந்த சாதியினர் எனக்கூறப்படுபவர்களால் சம அந்தஸ்து வழங்கப்படாதபிரச்னையை நாம் எதிர் நோக்கிக் கொண்டிருக்கிறோம்.

ஆகவே எந்த இன, மத மொழி, சாதி, சமூக பொருளாதார பிரிவைச் சேர்ந்தாலும்நாட்டின் சகல பிரஜைகளுக்கும் சமத்துவம்அளிக்க புதிய அரசியல் திட்டம் உத்தரவாதம் அளிக்க வேண்டியது முக்கியத்துவம் வாய்ந்ததொன்றாகும் எனவே உண்மையில் ஜனநாயகத்தின் அடிக்கல் சமத்துவமாகும்.

நிலமானியமுறை விளங்கிய காலத்தில் ஜனநாயகமுமில்லை சமத்துவமுமில்லை அவ்வாறிருந்தும் பல நாடுகளில் மக்கள் முன்னைய அக்காலப் பகுதியைப்பொற்காலமாக கருதுகிறார்கள். அந்தகாலத்தில் உலகம் முழுவதும் மன்னனே நலைமையானவனாக அதிகாரம் பொருந்தியவனாகவிருந்தான், மக்கள் அவ்வாறு இருக்கவில்லை ஆகவே மக்களிடையே கூட பெரும் சமத்துவமின்மை விளங்கியது. உலகின் பல பாகங்களிலும் அடிமைமுறை தலைதூக்கியிருந்தது.

எமது நாட்டினும் தமிழர் சிங்களவர்மத்தியில் அடிமை முறையிருந்தது காலனி ஆட்சி ஏற்பட்டதும் இலங்கையில் அடிமை முறைமை கடும்சட்டநடவடிக்கைகளால் கட்டுப்படுத்தப்பட்டது. பின்னர் சட்டம் கொண்டுவரப்பட்டு முற்றாக ஒழிக்கப்பட்டது. அமெரிக்காவில் அமெரிக்க சுதந்திரப் பிரகடனப் படுத்தப்பட்ட காலத்தில்கூட அடிமைமுறை எங்குமில்லாதவாறு மிகக் கொடூரமாகவிருந்தது. இக்கொடூர செயல் முறைக்கு பின்னர் அங்கு ஏற்பட்ட உள்நாட்டுப் போர் முற்றுப் புள்ளிவைத்தது.

(தொடரும்)

# இளைஞர் தம் பொறுப்பை உணர்ந்து செயலாற்ற வேண்டும்

மட்டுமல்ல, ... தாகத் தெரி

'ஒரு நாட்டின் ... இன்று எந்தக் கட்

ம்பாக வளருவது அந்த சியை நாம் ஆதரிக் வேண்

எமது இன மொழிக்காக ஒரு ஸ்திரமான கொள்கையுடன் தவறாது ஒரே நிலை...

# ஐயாறன் எழுதுவது

கதிர்காமத்துக்கும், கொழும்பு ஆடிவேல்விழாவுக்கும் சென்றிருந்தேன்.

இரு இடங்களிலும் முருகக் கடவுள் அற்புதம்செய்து வருவதைப் பார்த்தேன். என்ன அற்புதம் என்று கேட்கிறீர்களா? நமக்கெல்லாம் மிகவும் பயனுள்ள அற்புதந்தான் அது, தமிழர் சிங்களவர், முதலிய பல இனத்தவரையும் பல மதத்தவரையும் அங்கு ஒன்றுபடுத்திவரும் திருவிளையாடல்களைப் பார்க்க ஆயிரம் கண்கள் வேண்டும்.

புதிய அரசாங்கம் வந்ததும் தங்களுக்கு என்ன ஆகுமோ என்று தமிழரிடையே அதுவும் அரசாங்கத்திலுள்ள தமிழ் அதிகாரிகளிடையிலும், தென்னிலங்கையிலுள்ள தமிழ் வர்த்தகர்களிடையிலும், ஒருவித பயம் இருக்கிறது. அவ்வித பயப்படத் தேவையில்லை என்றும், வகுப்புக் கலவரம் மீண்டும் ஏற்படாதென்றும், சிங்களவரும் தமிழரும் இனி ஒற்றுமையோடு நன்கு வாழமுடியும் என்ற மேலான நம்பிக்கை எனக்குக் கதிர்காமத்தில் ஏற்பட்டது.

எப்படி? அதிகமான சிங்களவர்கள்பஸ்ஸிலும் கார்களிலும் வந்துகுவிகிறார்கள். திருநீறும்சந்தனமும்குங்குமமும் அவர்கள் நெற்றியில் பொலிகின்றன. பிள்ளைகள். குமரிகள், பெரியவர்கள் எல்லோரும் குடும்பம் குடும்பமாக காவடி எடுத்து, தமிழர் அடிக்கும் மேளத்திற்கும் ஏற்ப பரவசத்துடன் என்ன ஆட்டம் ஆடுகிறார்கள்! காவடிகளுக்கு கணக்கில்லை. டப்பா சங்கீதமும் 'பைலா' ஆட்டமும் தானே என்று முதலில் ஒருவித அலட்சியத்துடன் பார்த்தேன். பின்னர் காவடிஆடுபவர்களின் முகத்தை கவனித்தேன். அவர்கள் பக்தியுடனே மெய்மறந்தே ஆடுகிறார்களென்பதை அறிந்ததும், அவர்கள் மீது எனக்குப் பெருமதிப்பு ஏற்பட்டது!

0 0 0

காவடி ஆட்டத்துக்கான காவடிச் சிந்துகள் பல தமிழில் உண்டு. மேளம் வாசிக்கும் அந்தத் தமிழருக்குத் தெரியாதுபோலும். தெரிந்திருந்தால் ஒரு காவடிச் சிந்தாவது பாடிஇருக்கமாட்டார்களா? இனி அங்குள்ளவர்களுக்கெல்லாம் அன்னதானம் நடப்பதாயின் அது எவ்வளவு பெரிய அதிசயம்! முனி ஆண்டி என்ற அன்பரின் தலைமையில் சுமார் 70 சமையற்காரர்களும், யாழ்ப்பாணத்து அன்பர்கள் பலரும் இத்தொண்டுகளில் ஈடுபட்டிருக்கிறார்கள். மடத்துசுவாமிசளிடம்இந்த தர்மத்தைப்பற்றி பாராட்டிக்கூறியபோது அவர் ''எல்லாம் குருமகராஜின் அருள்'' என்று அடக்கமாகச் சொன்னார்.

எம்மதமும் சம்மதமே என்ற அறநெறியைப் பின்பற்றி அந்த மிஷனில், எல்லாச்சமயத்தவரும், சாதியினரும் எவ்வித வேற்றுமையுமின்றி, அச்சாப்பாட்டை முருகனின் பிரசாதமாகக் கருதி சாப்பிடுகின்றனர். பணமும் சாமான்களும் தட்டின்றி வந்துகுவிகின்றன. இப்படி அம்மடத்தில் அன்னதானம் அமோகமாக நடப்பதால்தான் வருடாவருடம் கூட்டம் அதிகரித்துவருகிறது. வயிற்று விசாரமில்லாததால் பலரும் கதிர்காமத்துக்கு கவலையின்றி அதிகமாக வரக்கூடியதாகவுள்ளது' உற்சவகாலமெல்லாம் தங்கி இருந்தாலும் அன்னவிசாரமில்லை! இது பெரிய காரியமல்லவா?

0 0 0

ஒவ்வொரு ஊரிலும் கிராமத்திலும் இப்படிப் பசிப்பிணியை அன்னதானத்தால்ஆற்றமுடியுமா? என்று அந்த மடத்துசுவாமியைக் கேட்டேன்.'முடியும்' என்று உறுதியாகச் சொன்னார் அவர். 'தனி ஒருவனுக்கும் உணவில்லையென்று சொல்லாத நிலை ஏற்படுமாயின் அறங்களெல்லாம் ஓங்குமாயின் புரட்சி முதலிய இயக்கங்கள் தலைதூக்குமா? பசிப்பிணியைத் தீர்க்கும் இந்த அன்புப்பணி நாடெங்கும் உலகெங்கும் பரவினால் உலகம் அமைதியாக ஒற்றுமையாக முன்னேறுமல்லவா?

கதிர்காம மடங்களெல்லாவற்றையும் அகற்றப் போகிறார்களா? என்று ஓர் அன்பர் கேட்கிறார். சில காலத்துக்கு முன் அடிபட்ட அந்தப் பேச்சையே இப்போது காணோம். கோவிலுக்கு முன்னிருந்த சில கடைகளை மட்டும் அகற்றியுள்ளனர். அநேகமாக எல்லா மடங்களும் அப்படியே உள்ளன. அதில் ஏரா...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்களத்தைத் தமிழிலும் தமிழைச் சிங்களத்திலும் மொழிபெயர்க்கக் கூடியவர்கள் தான் அரசாங்க இலாகாக்களிலும் கூட்டுத் தாபனங்களிலும் மொழி பெயர்ப்பாளர்களாக நியமிக்கப்பட வேண்டுமென்று யோசனை கூறப்பட்டிருக்கிறது மொழிப்பிரச்னைக்கே ஒரு நல்ல தீர்வுகிடைக்க வழிகாட்டக் கூடிய நல்ல யோசனை இது

அரசாங்க இலாகாக்களில் இந்த ஏற்பாடுசெய்வதற்கு முன்னதாக ஆட்சிமன்றத்தில் இந்த இரு மொழி பெயர்ப்பாளர்களும் அவசரம் தேவை.

ஆட்சிமன்றத்தில் மக்களின் பிரதிநிதிகள் எவ்வளவோ பேசுகிறார்கள் மக்களின் குறைநிறைகளையும் நாட்டின் நிலையையும் அவர்கள் எடுத்துக் கூறுகிறார்கள், இவற்றுக்குப் பரிகாரம் காண்பதற்கான யோசனைகளையும் அவர்கள் எடுத்துக் கூறுகிறார்கள். ஆட்சிமன்றத்துக்கு எல்லோரும் சென்று அதன் அலுவல்களைப் பார்க்கவோ பிரதிநிதிகள் பேசுவதைக் கேட்கவோ முடியாது. சிலர் சில நாட்களுக்குத்தான் செல்லவசதிகிடைக்கும், வெளியூரிலுள்ளவர்கள் கொழும்புக்குச் சென்று ஆட்சிமன்ற நடவடிக்கைகளைக் கவனிக்க முடியுமா?

பிரதிநிதிகளின் பேச்சு முழுவதுமாகப் பத்திரிகைகளில் வெளிவர, பத்திரிகைகளில் இடமிருக்காது. ஆட்சிமன்ற நடவடிக்கைப் பதிவேடான 'ஹன்சார்ட்டில்' பிரதிநிதிகளின் பேச்சுக்கள் முழுவதும் பிரசுரிக்கப்படுகின்றது. ஆனாலும் சிங்களத்தில் பேசப்படுவது சிங்களத்திலும், தமிழில் பேசப்படுவது தமிழிலும் ஆங்கிலத்தில் பேசப்படுவது ஆங்கிலத்திலும்தான் பதியப்படுகிறது.

சிங்களத்தில்பதியப்பட்டிருக்கும்முக்கியமான சிங்களப் பேச்சை சிங்களம் தெரியாதவர் படித்தறிந்து கொள்ளமுடியாது. தமிழில் பதியப்பட்டிருக்கும் பேச்சைத் தமிழ் தெரியாதவரும் படித்து அறிந்துகொள்ள முடியாது. 'ஹன்சார்ட்டை' வாங்கினாலும் கண்ணிருந்தும் குருடராய் இருக்கவேண்டிய அவலநிலை.

சிங்களப் பேச்சுக்களைத் தமிழிலும் தமிழ்ப் பேச்சுக்களைச் சிங்களத்திலும் மொழிபெயர்த்து ஹன்சார்ட்டில் இடம்பெறச் செய்தால் பொதுமக்கள் மட்டுமல்ல ஆட்சிமன்றப் பிரதிநிதிகள் பலருக்கும் கூட உபயோகமாக இருக்கும். அரசாங்கம் இதைச் செய்யுமா?

---

கதிர்காமத்தில் திருடர் கைவரிசை

# கைப்பொருள்யாவும் இழந்து

## வெறுங்கையுடன் திரும்பிய பெண்

கைதடி, சனி

கதிர்காம யாத்திரை சென்ற பெண் தமது தாலிக் கொடியையும் மற்றும் நகைகளையும் 400 ரூபா பணத்தையும் திருடக்கொடுத்துவிட்டுத்திரும்பினர். கைதடி மேற்கைச் சேர்ந்த கே. சுப்பிரமணியம் என்பவரது மனைவியே இவ்வித களவு கொடுத்தவராவர்.

பிரயாணக் களைப்பினால் கதிர்காம ஆலயத்தடியில் இரவு ஆழ்ந்த நித்திரையில் இருக்கும்போது கள்வர் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு தமது கைவரிசையைக் காட்டியுள்ளதாகத் தெரிகிறது. களவு கொடுத்த குடும்பம் வெறுங்கையுடன் வீடுதிரும்பியது.

---

## கிளிநொச்சி ப. ச. தேர்தல்

பூநகரி, சனி

கிளிநொச்சி பட்டின சபைத் தேர்தல் வருகிற மாதம் 6-ம் திகதி நடைபெறும். 7 வட்டாரங்களைக் கொண்ட பட்டினசபைத் தேர்தலில் தற்போதைய தலைவர் திரு. ஆனந்தசங்கரி போட்டியிடமாட்டார் என அறிவித்துள்ளார்.

தமிழரசுக்கட்சி சார்பில் 7 வட்டாரத்திலும் அபேட்சகர்கள் நிறுத்தப்படவிருப்பதாகவும் காங்கிரஸ் வேட்பாளர்கள் சுயேட்சையாக போட்டியிடவிருப்பதாகவும் தெரியவருகிறது.

தற்போதைய பட்டின சபை உறுப்பினர்களில் 6 பேர் மீண்டும் போட்டியிடவிருக்கின்றனராம்.

இப் பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலே வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970-ம் ஆண்டு ஜூலை மாதம் 26-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

---

ங்கில் அமர்த்துதல் விரும்பப்படத்தக்கதாகும்.

இத்தகைய மாற்றம் இலங்கையின் அரசியான இரண்டாவது எலிசபெத் மகாராணியின்மேல் விசுவாசம் கொண்டு சத்தியப்பிரமாணம் எடுத்துக்கொண்ட ஆட்சிமன்ற அங்கத்தவர்களை அரசியல் சபை அங்கத்தவர்களாகக் கடமையாற்றும் தங்களது வேலை ஆட்சிமன்ற அங்கத்தவர்களாகக் கடமையாற்றும் வேலையிலின்றும் முற்றாக வேறானது என்பதை நன்றாக உணரச் செய்யும்.

மக்களால் தெரிவு செய்யப்பட்ட இந்த அங்கத்தவர்கள் அரசியல் நிர்ணய சபை அங்கத்தவர்களாக அமர்ந்திருக்கும்போது எந்த அரசியல் திட்டத்தின்கீழ் அவர்கள் ஆட்சிமன்ற அங்கத்தவர்களாகக் கடமையாற்றுகிறார்களோ அந்த அரசியல்திட்டத்தை அழிக்கும் புரட்சி வாதிகளாகவே அமர்ந்திருககிறார்கள்.

மனதுக்குக் கஷ்டமான வேலையாகவிருந்தாலும் அரசியல் நிர்ணய சபையின் அங்கத்தவர்கள் தாங்கள் கடமையாற்றும்போது அவர்கள் ஆட்சிமன்ற அங்கத்தவர்கள் என்பதை மறந்துவிடவேண்டும், மகாதேசாதிபதியின் பேச்சையும் மறந்துவிட வேண்டும். இப்பேச்சில் வழங்கிய அதிகாரத்தை நினைவுபடுத்துவதை மாத்திரம் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்– எடுத்துக்காட்டாக 'எல்லா மக்களதும் அடிப்படை உரிமைகள் சுதந்திரம் உட்பட சோஷலிச ஜனநாயகத்தின் நோக்கங்களை காப்பாற்றும் நோக்குடைய, சுதந்திர குடியரசாக இலங்கையைப் பிரகடனப் படுத்தும் ஒரு புதிய அரசியல் திட்டத்தை வகுத்து, ஏற்றுச் செயல் படுத்தல்'.

தற்போது நாம் வகுப்பதற்கு ஈடுபட்டிருக்கும் அரசியல் திட்டம் நாட்டின் அரசியல் பொருளாதார, சமூக நிலைமைகளுக்கு ஏற்றதாக அமைய வேண்டும். நாட்டில் ஒற்றுமையைக் கொண்டு வரத்தக்க ஓர் அரசியல் திட்டத்தை வகுக்கவேண்டும் என்ற நல்ல கருத்தை வகுக்க வேண்டும் என்ற நல்ல கருத்தை அரசியல் நிர்ணயசபையின் அங்கத்தவர்களில் பலர் குறிப்பிட்டுள்ளனர். எமது நாடு பல இன, பல மத மக்களைக் கொண்ட நாடாகும்.

இந்நாட்டில் உள்ள பல்வேறு மதங்கள் காரணமாக எழும் பிரச்னைகளைத் தீர்ப்பதில் அதிக கஷ்டம் இருக்காது. அவற்றிற்குத் தேவையான பாதுகாப்பை இவ்வரசியல் திட்டத்தில் அளித்துவிடலாம்.

---

# உணர்ந்து செயலாற்ற வேண்டும்

மட்டுவில், சனி

'ஒரு நாட்டின் முதுகெலும்பாக வளருவது அந்த நாட்டின் எதிர்கால பரம்பரையான இளைஞர் சமுதாயமே. அந்த இளைஞர்சமுதாயம் தன்னுடையபொறுப்பை கடமை கண்ணியம் கட்டுப்பாடு சுயநம்பிக்கை ஆகிய பொறுப்புணர்ச்சிகளுடன் சிந்தித்துச் செயலாற்றத் தவறுமேயாகில் தனது கடமையிலிருந்து தவறிவிட்ட பெரும் குற்றத்திற்கு ஆளாக வேண்டியதுடன் அடுத்து வரவிருக்கும் தனது எதிர்கால சமுதாயத்தை தக்க வழியில் இட்டுச் செல்லத் தவறிய குற்றத்திற்கும் உடந்தையாக வேண்டிய நிலை உருவாகும்.

இவ்வாறு சாவகச்சேரி ஆட்சிமன்ற உறுப்பினர் திரு வி என் நவரத்தினம் தென்மராட்சி தமிழரசு வாலிபமுன்னணி கருத்தரங்கில் உரையாற்றுகையில் கூறினார். வழக்கறிஞர் திரு என் அருணசலம் தலைமையில் நடைபெற்ற இந்தக் கருத்தரங்கில் திரு நவரத்தினம் எம் பி தொடர்ந்து கூறியதாவது:-

இன்றைய எமது நிலை என்ன எமது அரசியல் உரிமைகள் எவை எமது இனம் மொழி கலை கலாச்சாரத்திற்காக நாம் செய்யவேண்டிய சேவைகள் எவை என்பனவற்றை நாட்டுப் பற்றும் மொழிப்பற்றும் இனப்பற்றும் கொண்டுள்ள இளைஞர் சமுதாயமே முதலில் தமக்குத் தாம் சிந்திக்கக் கடமைப்பட்டுள்ளனர்.

இந்த நிலையிலே ஒவ்வொருவரும் சுயநலக் கொள்கையை ஆதரித்தால் எமது இன மொழி கலை கலாச்சாரம் பற்றி சிந்திக்கவோ செயலாற்றவோ, இந்த நாட்டில் எவர் இருக்கிறார்கள். இதை எவரும்பொறுப்புடன் சிந்திப்பதாகத் தெரியவில்லை இன்று எந்தக் கட்சியை நாம் ஆதரிக் வேண்டும், எந்த கட்சியின் [illegible]ளையைத் திறக்கவேண்டும் [illegible]க்கு எந்த குறுக்கு வழியிற் சென்றால் நல்ல உத்தியோகமாகக்குறுக்கு வழியில்கிடைக்கும் என்று குறுக்கு வழியைப் பின்பற்றும் வழக்கம் சிறுவர் சமுதாயத்திலிருந்து அறவே ஒழிந்து அவர்கள் எமது இன மொழிக்காக ஒரு ஸ்திரமான கொள்கையுடன் தவறாது ஒரே நிலையில் நிற்கப் பொறுப்புடன் நடக்கத்தக்க நிலையை உருவாக்க வேண்டும்.

செயலாளர் திரு: எஸ் பி கணபதிப்பிள்ளை. சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் திரு. எஸ். கே. மயில்வாகனம் உட்பட பலஉரை நிகழ்த்தினர்.

---

## தீவுப்பகு..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

த்தை இத் தொகுதிக்கு அமுல் நடத்தாது நீக்கி இங்குள்ள கமக்காரர்களுக்கு உப உணவுகளாகிய வெங்காயம், மிளகாய் மற்றும் புகையிலைச் செடி போன்றவற்றை உற்பத்தியாக்க வசதியளித்து கடனுதவி செய்து கொடுக்கவேண்டும் என உணவு விவசாய அமைச்சரை வேலணை கிராம சபைத் தலைவர் திரு. க. சதாசிவம் கடிதமூலம் கேட்டுள்ளார்.

---

## தமிழ்மக்களை..

(1-ம்பக்கத்தொடர்ச்சி)

சந்தித்து பேசுங்கள். அவர்கள் தீர்க்கக் கூடியதை தீர்த்துவைப்பார்கள்.

மொழிப்பிரச்னை, தொழிற் சங்க விஷயமல்ல; இது அரசியல் பிரச்னை. அரசியல் கண்ணேட்டத்துடன் மொழிப் பிரச்னையைத் தீர்க்கவேண்டும்: இதுசம்பந்தமாக அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தி தீர்வுகாண முயலவேண்டும். அதைவிடுத்து சத்தியாக்கிரகமூலமோ, வேலைநிறுத்தமூலமோ தீர்க்க முடியாது.

அரசாங்கத்தின் நிலைமை மாறிவிட்டது. ஆதலால் இன்றைய அரசியல்நிலையில் தனித்துநில்லாமல், அரசாங்கத்துடன் சேர்ந்து, ஒத்துழைத்து நமது பிரச்னைகளைத் தீர்த்துக்கொள்ள முயலவேண்டும்.

ஓர் அரசியல் கட்சியினுடனே, அதன் ஒத்துழைப்புடனே தனித்துநில்லாமல், அரசாங்கத்துடன் சேர்ந்து கொள்ளவேண்டும். அதனுடன் தொழிற்சங்கத்தை இணைத்துச் செயலாற்ற வேண்டும்.

பாஷைப் பிரச்னையைப் பொறுத்த வரையில் இன்றைய அரசாங்கம் தீர்வு காணக்கூடிய ஒரு நிலையை ஏற்படுத்தி வருகிறது. ஆதலால் மொழிப்பிரச்னை பற்றி நீங்கள் பீதிகொள்ளத் தேவையில்லை.

அரசாங்கம் தொழிலாளர்களுக்குத்தேவையான வசதிகளைச் செய்துவருகின்றது. இடமாற்றம், புது நியமனம் இரண்டும் இன்றைய நிலையில் முக்கியமான பிரச்னைகள்.

அரசாங்க இடமாற்றங்களை முக்கியமாக சங்கங்கள் மூலம் தீர்த்துக்கொள்ள வேண்டும். தனிப்பட்ட முறையில் தீர்வுகாணுவது சங்கங்களினுள் பிரச்னைகளைத் தோற்றுவிக்கும்.

வேலையில்லாத்திண்டாட்டம் பெருகிவரும் இவ்வேளையில், வேலைவாய்ப்பைக் கூட்டவேண்டும். ஒருவர் கண்டிப்பாக 8 மணித்தியால வேலைசெய்தால் மற்றவர்களுக்கும் வேலைவாய்ப்பை ஏற்படுத்த ஏதுவாகும் படித்த வாலிபர்களினதும் பெண்களினதும் தொகை அதிகரித்துக்கொண்டே வருகிறது. குறிப்பாக வைத்தியசாலைகளில்குறைந்த பரிசாரகர்களிலேயே வேலைப்பளு சுமத்தப்படுகிறது: இதனை நிவர்த்திசெய்யும் பட்சத்தில் எத்தனையோ பேருக்கு வேலைவாய்ப்பு ஏற்படவழி பிறக்கும்.'

நியமன எம் பி. திரு. எம். சி. சுப்பிரமணியம் பேசுகையில் கூறியதாவது:-

அரசாங்கம், மக்கள் அரசாங்கம் குறிப்பாக ஏழைத் தொழிலாளர் மக்களின் அரசாங்கம். ஆதலால் எப்பிரச்னையையும் நம் அரசாங்கத்தை அணுகித் தீர்வு காணவேண்டும்.

சுகாதார சேவையில் கடமையாற்றும் சகல சிறு தொழிலாளர்கள் படும் கஷ்டங்கள், அவர்களுக்கிருக்கும் குறைபாடுகள்பற்றியும் நான் நன்கு அறிவேன். நான் இதுபற்றி அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தி, தகுந்த நடவடிக்கை எடுத்து உங்கள் பிரச்னைகளைத்தீர்க்க முயல்வேன்.

'தொழிற்சங்கத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கும் நிலையில் இன்றைய அரசாங்கம் இருப்பதால் உங்கள் பிரச்னைகளையும், உங்கள் சங்கத்தின் மூலம் தீர்க்க ஒன்றுபடுங்கள்' இதனால் உங்களது சகல பிரச்னைகளும் தீர வழி பிறக்கும்.'

சங்கத் தலைவர் திரு. பொ. தேவராசா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் உபதலைவர் செல்வி லூசி தோமஸ் பேசுகையில், மருத்துவ மாதர் மத்தியில் பிரச்னைகள் அதிகம். இத்தொழிற்சங்கம் முன்னேறாததற்குக் காரணம் அரசியல் ஈடுபாடுதான், எந்தப்பாராளுமன்ற உறுப்பினராவது எமது கோரிக்கைளையோ, கஷ்டங்களையோ தீர்க்க முன்வரவில்லை. எவரும் தனிப்பட்ட முறையில் கட்சியைத் தழுவலாம்: ஆனால் தொழிற்சங்க ரீதியில் கட்சியை அணுகினால் சங்கம் பிளவு பட்டு விடும்.

இத்தொழிற்சங்கத்தில் சிலர் சிறு சுகாதார சேவையாளரின் நன்மையைக்கருதாமல் தமிழினத்தையே காட்டிக்கொடுக்கும்நிலையில் உத்தியோகஉயர்வுபெற்றார்கள்,

சிறு சேவையாளரைப் பொறுத்தமட்டில் சிங்களம் தேவையில்லை கடமைகளைச் சரிவரச்செய்து உரிமைகளைக் கேட்க வேண்டும் எமது தொழிற் சங்கத்தில் நிலவும் பாகுபாடுகள் குறித்து வெட்கப்பட வேண்டும், வேதனைப் பட வேண்டியுள்ளது என்றார்.

---

காவடிச் சிந்துகள் பல தமிழில் உண்டு. மேளம் வாசிக்கும் அந்தத் தமிழருக்குத் தெரியாது போலும். தெரிந்திருந்தால் ஒரு காவடிச் சிந்தாவது பாடிஇருக்கமாட்டார்களா? இனி அங்குள்ள மேளக்காரர்கள் காவடிச் சிந்து, திருப்புகழ் எல்லாம் கற்று அதை வாசிப்பதுடன் அவற்றை சிங்களத்திலும் வெளியிட்டால், அந்தமெட்டிலே சிங்களப் பாட்டுகளையும் இயற்றினால் காவடி ஆட்டமெல்லாம் பக்திமயமாக மாறி உள்ளத்தை உருக்கக்கூடும் அவர்கள் அப்படிச் செய்ய, படித்த தமிழர் யாரும் உதவுவார்களா? அப்படிச்செய்வது பலவிதங்களிலும் பெரிய புண்ணியமாகும்.

அவர்கள் மெய்மறந்து இப்படி ஆடுவது, பிக்குகளில் சிலருக்கு பிடிக்கவில்லையாம் என்றாலும் வேண்டாம் என்று யார் தடுத்தாலும் அவர்கள் கேட்கமாட்டார்கள். கதிர்காம தெய்யோ இடத்தில் அவர்களுக்கு அவ்வளவு நம்பிக்கையும் பக்தியும்! இரவு பகல் 24 மணி நேரமும் காவடி ஆட்டமும் மேளங்களின் முழக்கமும் கதிர்காமத்தை தெய்வலோகமாக்குகின்றன அத்துடன் தலைக்குமேல் களாஞ்சித்தட்டுகளை வைத்துக்கொண்டு அதிகாலை முதல் பலமணித்தியாலமாக வெய்யிலில் குழந்தைகள், தாய்மார்கள் உள்ளிட்டு ஆயிரக்கணக்கில் அவர்கள் தவம்கிடக்கும் காட்சி உள்ளத்தை உருக்கியது.

0 0 0

அடுத்தது ஸ்ரீ இராமகிருஷ்ண மடத்திலே நடக்கும் அன்னதானம் காலையில் காப்பி, பலசுாரம், 9 மணிக்குமேல் நீர் மோர் பானகம். பகல் 11 மணி முதல் மாலை 4 மணிவரையிலும்கூட, வந்தவர்களுக்கெல்லாம் இல்லை என்னாமல் இலைபோட்டு மகேஸ்வர பூசை. மாலையில் தேத்தண்ணீர் இரவு 7 மணிக்கு மீண்டும் சாப்பாடு ரேஷன் காலத்திலே இப்படி வந்தவர்க

அந்தப் பேச்சையே இப்போது காணோம். கோவிலுக்கு முன்னிருந்த சில கடைகளை மட்டும் அகற்றியுள்ளனர். அநேகமாக எல்லா மடங்களும் அப்படியே உள்ளன. அதில் ஏராளமான யாத்திரிகர் தங்கியிருந்து தரிசனம் செய்கிறார்கள். பிரதமர் ஸ்ரீமா மீண்டும் ஆட்சிக்கு வந்ததும், இந்த மடங்களில் கைவைக்க வேண்டாமென்று உத்தரவிட்டிருப்பதாகக் கேள்விப்பட்டேன்.

0 0 0

கதிர்காமமென்றால் பிரதமர் ஸ்ரீமாவுக்குப் பெரிதும் நம்பிக்கை. அவரது கணவனார் பிரதமராக இருந்தபோது, முதலில்மகாவிஷ்ணு கோவிலுக்கு (இப்போது புத்தர் கோவில்) ச்சென்று தரிசித்துவிட்டு பிள்ளையார் கோவிலுக்கு வணங்க வந்தாராம்ஆனால் அங்கு போக வேண்டாமென்றும் அது தமிழர் கோயில் என்றும் யாரோ கூறவே, அவர் அங்கு செல்லாமல் பெரிய கோயில் எனும் முருகனின் ஆலயத்துக்கு வந்து களாஞ்சித்தட்டை கப்புறாளையிடம் கொடுத்தபோது அத்தட்டு தவறி கீழே விழுந்ததாகவும், அது பெரிய அபசகுனமாகி, சிலமாதங்களில் அவர் அகாலமரணமடைந்ததாயும், பின்னர் அவரது மனைவியார் ஸ்ரீமாவோ ஒரு நாள் அதிகாலை பூசையின் போது பிள்ளையார் கோயிலுக்கு வந்து நின்று கண்ணை மூடி தாரை தாரையாக கண்ணீர் வடித்ததாகவும், பூசைசெய்து, பிரசாதம் பெற்றுச் சென்றதாயும் ஒரன்பர் தெரிவித்தார்.

இவ்வளவு பக்தியுள்ள ஒருவரை பிரதமராகக் கொண்ட ஈழநாடு ஒற்றுமையுடன் அமைதியாக முன்னேறுமென்று நம்புவது தவறாகுமா?

0 0 0

தீயவை புரிந்தாரேனும்
குமரவேள் திருமுன்னுற்றால், தூயவராகி மேலைத்
தொல்கதியடைவர் என்கை,
ஆயவும் வேண்டும் கொல்லோ
அடுசமர் அந்நாளிட்ட,
மாயையின் மைந்தனன்றோ
வரம்பிலா அருள் பெற்றுய்ந்தான்.

— கச்சியப்பர் சுவாமிகள்

---

பேராதனை. வெள்ளி

பேராதனைப் பல்கலைக்கழக தத்துவப் பேராசிரியர் டாக்டர் கே. என். ஜயதிலகா பேராதனையில் காலமானார்.

பௌத்த தத்துவங்கள் பற்றிய பல நூல்களின் ஆசிரியரான பேராசிரியர் ஜயதிலக்க சிறந்த பௌத்த மதக் கோட்பாடுகளை நவீன விஞ்ஞான ரீதியான முறையில் விளக்கம் செய்வதில் வல்லவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org